28.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மணிமுக்தா அணை நீரில் "வலை வீசும்' மீனவர்கள்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி மணிமுக்தா அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீரில் மீனவர்கள் வலை வீசி மீன் பிடிக்கின்றனர்.

கள்ளக்குறிச்சி மணிமுக்தா அணை கடந்த 5 ஆண்டுகளுக்கு பிறகு, அதன் கொள்ளளவான 36 அடியில்(736 மில்லியன் கன அடி) 34 அடி உயரத்திற்கு (590 மில்லியன் கன அடி) நீர் உயர்ந்துள்ளது. வரத்து நீர் முழுவதும், கடந்த சில தினங்களாக வெளியேற்றப்பட்டு வருகிறது.

அதன்படி சில நாட்களாக மழை குறைவு காரணமாக இப்பகுதிக்கு நீர்வரத்து குறைந்து, இரு தினங்கள் சராசரியாக 500 கன அடி நீர் மட்டும், ஒரு ஷட்டர் வழியாக வெளியேற்றப்பட்டது. ஏற்கனவே அணையில் வளர்ப்பதற்காக மீன் குஞ்சுகள் விட்டுள்ள நிலையில், உபரி நீர் வழியாக வெளியேறும் மீன்களை பிடிப்பதற்காக மீனவர்கள் வலைவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

### நிலவேம்பு குடிநீர் வழங்கல்

கிருஷ்ணகிரி: மழைக்கால தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்க, பொதுமக்களுக்கு கிருஷ்ணகிரி நகரில், 10 இடங்களில் இலவசமாக நில வேம்பு குடிநீர் வழங்கப்படுகிறது. மழைக்கால தொற்று நோய்களை தடுக்க, பொதுமக்களுக்கு இலவசமாக நில வேம்பு குடிநீரை வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி, மாவட்ட நிர்வாகம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை சார்பில்,

கிருஷ்ணகிரி நகரில், 10 இடங்களில், நாளை (29ம் தேதி) வரை நில வேம்பு குடிநீர் இலவசமாக வழங்கப்படுகிறது. கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில், இரண்டு இடங்கள், கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, உழவர் சந்தை, பழையபேட்டை காந்தி சிலை, புதிய பஸ் ஸ்டாண்டு, ராயக்கோட்டை மேம்பாலம், சேலம் சாலை பதிவாளர் அலுவலகம் எதிரில், சந்தை பேட்டை, ரவுண்டனா ஆகிய இடங்களில், இலவசமாக நில வேம்பு குடிநீர் வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை உள்ளிருப்பு டாக்டர் அசோக்குமார் தெரிவித்துள்ளார்.

**மாவட்டத்தில் 748 மி.மீ., மழை: குறைதீர் கூட்டத்தில் தகவல்**

கரூர்: கரூர் மாவட்டத்தில், சராசரி மழையளவை விட அதிகபட்சமாக, 748 மி.மீ., மழை பெய்துள்ளதாக, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து, கலெக்டர் ஜெயந்தி கூறியதாவது: கரூர் மாவட்டத்தின் சராசரி மழையளவு, 652 மி.மீ., உள்ள நிலையில், இதுவரை, 748.15 மி.மீ., மழை பெய்துள்ளது. அதிகப்படியாக பெறப்பட்ட வடகிழக்கு பருவமழை காரணமாக கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் சிறுதானிய பயிர்கள், 18 ஆயிரத்து, 464 ஹெக்டேரிலும், பயறு வகைகள், 8,427 ஹெக்டேரிலும், எண்ணை வித்து பயிர்கள், 5,086 ஹெக்டேரிலும், கரும்பு, 2,259 ஹெக்டேரிலும், தோட்டக்கலை பயிர்கள், 9,540 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பா பருவ நெல் சாகுபடி, 9,323 ஹெக்டேரில் நடவு செய்யப்பட்டு, வளர்ச்சி பருவத்தில் நன்றாக உள்ளது. தற்போது, மேற்கொள்ளப்பட்டு வரும் சாகுபடி பரப்பு மற்றும் பயிர்களுக்கு ஏற்ப உரங்கள் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் யூரியா,

1,403 மெட்ரிக் டன், டி.ஏ.பி., 589 மெட்ரிக் டன், பொட்டாஷ், 730 மெட்ரிக் டன், கலப்பு உரங்கள், 793 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது. கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு, உரம் தட்டுபாடு இல்லாமல் கிடைக்கவும், உரம் தரம் குறித்து மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில் பொதுப்பிரிவினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு மானியத்தில், விவசாய கருவிகள் வழங்கிட, 7.84 லட்சம் ரூபாய் நிதி இலக்கு பெறப்பட்டு பயனாளிகள் தேர்வு நடந்து வருகிறது. தேவைப்படும் வவசாயிகள், சம்பந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சிறுமலையில் செயற்கை மழை தேவை: விவசாயிகள் வலியுறுத்தல்

திண்டுக்கல்,:திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் ஹரிஹரன் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., நாகேந்திரன், வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார், தோட்டக்கலை துணை இயக்குனர் ராமநாதன் பங்கேற்றனர்.
விவசாயி வீரப்பன்: குடகனாறும், சந்தானவர்த்தினி ஆறும் ஒன்று சேறுமிடத்தில் புதிய தடுப்பணை கட்டப்பட்டது. இங்கு இருந்து வாய்க்கால் வெட்டி(பூத்தாம்பட்டி வழியாக) வேடசந்தூர் குஜிலியம்பாறை பகுதி கண்மாய்களுக்கு தண்ணீர் வழங்க வேண்டும். இதனால் விவசாயிகள் பயனடைவதுடன், நிலத்தடி நீர் கிடைக்கும். குடிநீர் பற்றாக்குறை குறையும்.
அதிகாரி: விரைவில் வாய்க்கால் வெட்டி உங்கள் பகுதிக்கு தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தின் நிக்கோலஸ்: திண்டுக்கல் முத்தழகுபட்டி, பள்ளப்பட்டி, நாகசமுத்திர கண்மாய் நிரம்பி ஆகாயத் தாமரை, சங்கு பூச்சிகள், அட்டைகள் அதிகம் உள்ளன. அருகிலுள்ள வீடுகளுக்கும் வருகின்றன.

கலெக்டர் ஹரிஹரன்: தகுந்தநடவடிக்கை எடுக்கப்படும். விரைவில் குளத்தை தூர்வாற ஏற்பாடு செய்யப்படும். விவசாயிகள் சங்க ஒன்றியக்குழு தலைவர் பாலசுப்பிரமணியன்: நிலக்கோட்டை பகுதியில் போதிய மழையில்லை. எனவே பெரும்பாலான கண்மாய்கள் காலியாக உள்ளன. ஏந்தல் கண்மாயில் வீணாகும் தண்ணீரை அவற்றிற்கு திருப்ப வேண்டும்.

பொதுப்பணித்துறை அதிகாரி: அப்பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, முறையாக தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். "நீரின் வழி நீருக்@க தெரியும்' கூட்டத்தில் விவசாயிகள் சிலர் கூறுகையில், ""சிறுமலையில் மேக கூட்டங்கள் இருந்தா<லும் மழை பெய்வது இல்லை. எனவே செயற்கை மழை உருவாக்கி வறட்சியை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலக்கோட்டை ஒன்றியத்தில் 21 கிராமங்களுக்கு நீர் ஆதாரமின்றி தவிக்கிறோம். கேன் வாட்டர் உபயோகித்து வருகிறோம். சிறுமலை பகுதி அணையை திறந்து விட்டால், இப்பிரச்னை இருக்காது. குளங்கள், வரத்து கால்வாய்கள் முழுவதும் ஆக்கிரமிப்புகள் தொற்றியுள்ளன. அவற்றை உடனே அப்புறப்படுத்தினால் மட்டுமே "நீரின் வழி நீருக்கே தெரியும்' என்றனர். உதவி இயக்குனர் கிஷோர், கால்நடை பராமரிப்பு இணை இயக்குனர் ராஜேந்திரன், நேர்முக உதவியாளர் கார்த்திகேயன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## பருத்தி பயிருக்குஇடுபொருள் மானியம்

ரெட்டியார்சத்திரம்,:பருத்தி சாகுபடி விவசாயிகளுக்கு, 50 சத மானியத்தில் உரம், மருந்து, சத்துப்பொருள் உள்ளிட்டவை வழங்கப்பட உள்ளது.ரெட்டியார்சத்திரம், கன்னிவாடி, ஸ்ரீராமபுரம் பகுதிகளில், ஏராளமான விவசாயிகள் மானாவாரியாக பருத்தி சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர்.

இரண்டாயிரம் ஏக்கருக்கும் மேல் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்விவசாயிகளுக்கு மகசூலை அதிகரிக்க இடுபொருள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.வேளாண்மை உதவி இயக்குனர் மனோகரன் கூறுகையில், ""தமிழ்நாடு பருத்திப்பயிர் இயக்க திட்டம் மூலம் ஏக்கருக்கு 5 கிலோ நுண்ணூட்டச்சத்து, அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, களைக்கொல்லி, பயிர் பாதுகாப்பு மருந்துகள் 50 சத மானியத்தில் கிடைக்கும். தேவைப்படுவோர் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம்," என்றார்.

## நிலவேம்பு கஷாயம் 5 நாள்தொடர்ந்து பருக வேண்டும்

கொடைரோடு: நோய் எதிர்ப்பு சக்தி உடலில் அதிகரிக்க நிலவேம்பு கஷாயம் தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் பருக வேண்டும் என சித்த மருத்துவர் தெரிவித்தார்.

மர்ம காய்ச்சல், சளி ,இருமல் உள்ளிட்ட பருவ கால நோய்களால் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். இத்தகைய நோய் பாதிப்புக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தி வலுவாக இல்லாததுதான் முக்கிய காரணம்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க பொது சுகாதார துறை மூலம் அரசு மருத்துவமனைகளில் ஐந்து நாட்களுக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கப்படுகிறது. ஏராளமானவர்கள் கஷாயம் பருகி வருகின்றனர். சிலர் கஷாயத்தினை ஒரு நாள் மட்டும் பருகுகின்றனர். இதனால் போதிய அளவிற்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்காமல் போவதற்கு வாய்ப்புள்ளது. அரசு சித்த மருத்துவர் செந்தில்வேல் கூறும்போது, "" குறைந்தது 5 நாட்கள் தொடர்ச்சியாக நிலவேம்பு கஷாயம் பருக வேண்டும். இதற்காகத்தான் அரசு ஐந்து நாட்கள் சிறப்பு முகாம் நடத்துகிறது. கசப்பு தன்மை காரணமாக ஓரிரு நாட்கள் மட்டும் பருகுவதால் போதிய அளவிற்கு எதிர்ப்பு சக்தி உட<லுக்கு கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது," என்றார்.

பழங்கள் உற்பத்தியாளர்

## அணையில் கூடுதல் தண்ணீர் திறப்பு

ஒட்டன்சத்திரம்,:ஒட்டன்சத்திரம் பரப்பலாறு அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் வினாடிக்கு 100 கனஅடியிலிருந்து 200 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம் தாலுகாவில் மழை சரிவர பெய்யாததால் சமவெளிப்பகுதியில் உள்ள குளம், கண்மாய்களுக்கு நீர்வரத்து இல்லை. மலைப் பகுதியில், மழை பெய்ததால் பரப்பலாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து 84 அடியாக உயர்ந்தது. அணையில் 90 அடி உயரத்திற்கு நீரை தேக்கி வைக்க முடியும். இருப்பினும் பாதுகாப்பு கருதி அணையில் இருந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நவ.22 முதல் வினாடிக்கு 100 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அடுத்து வரும் நாட்களில் கனமழை பெய்யும் என வானிலை மையம் அறிவித்துள்ளது. இங்குள்ள குளம் கண்மாய்களுக்கு நீர்வரத்தை பெருக்கவும், கடந்த 2 நாட்களாக வெளியேற்றப்படும் நீரின் அளவு, வினாடிக்கு 200 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. திறந்துவிடப்படும் நீர் தாசரிபட்டி முத்துபூபாளசமுத்திரம், விருப்பாட்சி பெருமாள் குளம் மற்றும் தங்கச்சியம்மாபட்டி சடையன்குளம் கண்மாய் ஆகியவற்றிற்கு செல்கிறது. இவற்றில் முத்துபூபாளசமுத்திரம் இன்னும் 2 நாட்களில் மறுகால் செல்லும் என்றும், பெருமாள் குளம் பாதியளவிற்கு நிரம்பி உள்ளதாகவும் பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 100 கனஅடி. 83.25 அடி <உயரம் தண்ணீர் உள்ளது. குளம், கண்மாய்களுக்கு நீர்வரத்து ஏற்பட்டிருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## முருங்கை சாகுபடி குறித்துவிவசாயிகளுக்கு பயிற்சி

குஜிலியம்பாறை: முருங்கை விவசாயத்தில் கூடுதல் மகசூல் பெறும் வகையில், விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நரசிங்கபுரத்தில் நடந்தது. நபார்டு உதவி பொது மேலாளர் சஞ்சீவி தலைமை வகித்தார். ஊராட்சி

தலைவர் ராஜகோபால், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஜான்நெல்சன் முன்னிலை வகித்தனர். முருங்கை விவசாயத்தில், கூடுதல் மகசூல் பெறும் வகையில், பல்வேறு தலைப்புகளில் ஆலோசணை வழங்கப்பட்டது.

முருங்கை விதை சேகரித்து விற்றல், விதை எண்ணை தயாரித்தல், இலை பவுடர், காய் விற்பணை குறித்து விளக்கப்பட்டது. பூஜா பெண்கள் மேம்பாட்டு அறக்கட்டளை அலுவலர் வேல்முருகன், பள்ளி தாளாளர் சந்திரசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஏற்றுமதி ரக வாழைப்பழங்கள் வீண் கூடலூர் விவசாயிகள் புலம்பல்

கூடலூர்,:கூடலூர் பகுதியில் ஏற்றுமதி செய்யப்படும் உயர்தர வாழைப்பழங்களை, வியாபாரிகள் வாங்க வராததால் வீணாகியுள்ளன.கூடலூர் அருகே பளியன்குடி, ஊமையன் தொழு, காஞ்சி மரத்துறை, லோயர்கேம்ப் உள்ளிட்ட பகுதிகளில் திசு வாழையான ஜி-9 ரக வாழைகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஏற்றுமதி தரம் வாய்ந்த இந்த வாழைப்பழங்களை வெளி மாவட்டங்களில் இருந்து வரும் வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். அவற்றை குளிர்பதனக் கிட்டங்கியில் வைத்து, கூடுதல் விலை கிடைக்கும் நேரங்களில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார்கள். கடந்த சில தினங்களாக வியாபாரிகள் வாழைகளை வாங்க கூடலூர் பகுதிக்கு வரவில்லை. இதனால், வாழைத்தார்கள் மரங்களிலேயே பழமாகி அழுகத் துவங்கிவிட்டன. அடுத்த சாகுபடிக்காக பல விவசாயிகள் வாழை மரங்களை வெட்டி வருகின்றனர். வியாபாரிகள் வராததால் இந்த ஆண்டு லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாக வாழை பயிரிட்ட விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

## தென்னை உற்பத்தியாளர் கருத்தரங்கு

சிங்கம்புணரி: சிங்கம்புணரியில் தென்னை <உற்பத்தியாளர் கம்பெனி கருத்தரங்கு நடந்தது.

ஊராட்சி தலைவர் சண்முகவேல் தலைமை வகித்தார்.வேளாண் அலுவலர் விஜயன் வரவேற்றார். தேங்காயிலிருந்து 100 வகையான பொருட்கள் மதிப்பு கூட்டும் தொழில் துவங்குதல்,வீரிய ரக ஒட்டுகன்றுகள் உற்பத்தி செய்து குறைந்த விலையில் கொடுப்பது,கடன் வசதி, மதிப்பு கூட்டப்பட்டபொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி வாய்ப்பு குறித்து எடுத்துக் கூறப்பட்டது.மாவட்ட வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் சவுந்தரராஜன்,தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்க செயலாளர் செல்லத்துரை, தென்னை உற்பத்தியாளர்கள் கம்பெனி தலைவர் பன்னீர் செல்வம், தென்னை வளர்ச்சிக்குழு செயலாளர் சேவுகப்பெருமாள் பங்கேற்றனர்.வேளாண்மை வணிக உதவி அலுவலர் ரத்தினகாந்தி நன்றி கூறினார்.

## விதை நெல் தட்டுப்பாடால் வத்தலக்குண்டு விவசாயிகள் அவதி

வத்தலக்குண்டு,:"வத்தலக்குண்டு வேளாண் அலுவலகத்தில் விதை நெல் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளதால் கூடுதல் அளவில் விதை நெல் கொள்முதல் செய்ய வேண்டும்' என, விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். வத்தலக்குண்டு பகுதியில் குறைந்த அளவே மழை பெய்ததால் கிணறுகளில் நீர்மட்டம் உயரவில்லை. கொடைக்கானல், தாண்டிக்குடி மலைப்பகுதியில் மழை அதிகமாக பெய்து மஞ்சளாறு, மருதாநதி அணைகள் நிரம்பி உபரி நீர் ஒரு மாதமாக வெளியேறுவதால் கண்மாய்கள் நிறைந்தன. கால்வாய், ஆற்றில் தொடர்ந்து நீர் சென்றதால் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்தது. இதனால் வத்தலக்குண்டு பகுதி விவசாயிகள் தாமதமாக நெல் நடவு பணியில் ஈடுபட்டு உள்ளனர். அக்டோபரில் வேளாண் அலுவலகத்தில் 18 டன் விதை நெல் இருந்தது.

இதில் மற்ற மாவட்டங்களுக்கு வழங்கிய 3 டன் போக, 15 டன் நெல் விற்று தீர்ந்து விட்டதால் அலுவலகத்தில் விதை நெல் இருப்பு இல்லை. தாமதமாக நடவு பணிகளை துவங்கிய விவசாயிகள், வேளாண் அலுவலகத்தில் விதை நெல் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். அவர்களிடம் நிலக்கோட்டை, ஆத்தூரில் சென்று வாங்கி கொள்ளும்படி அறிவுறுத்துகின்றனர். விதைநெல்லை கொள்முதல் செய்து இருப்பு வைத்து விவசாயிகளுக்கு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பயறு வகைகளில் டி.ஏ.பி.,தெளிக்க 50 சத மானியம்

பழநி,:பழநி பகுதியில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் பயறுவகை பயிர்களில் டி.ஏ.பி., உரம், இலைவழித் தெளிப்பிற்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. பழநி அருகே அமரப்பூண்டியில் டி.ஏ.பி., செயல்விளக்க முகாம் நடந்தது. வேளாண் துணை இயக்குனர் தங்கச்சாமி, உதவி இயக்குனர் சுருளியப்பன் முன்னிலை வகித்தனர். துணை இயக்குனர் பேசியதாவது: டி.ஏ.பி., 2 சதவீதம் தெளிப்பதால் பயறுவகைகளில் பூக்கும் தன்மை அதிகரிக்கும்; மணிகளும் திரட்சியாக இருக்கும்; மகசூல் அதிகரிக்கும். பூக்கும் தருணத்தில் ஒருமுறை, 15 நாட்களுக்குப் பிறகு மறுமுறை என இருமுறை தெளிக்க வேண்டும் என்றார். உளுந்து வம்பன்-4, வம்பன்-5 விதைப்பண்ணையில், டி.ஏ.பி., இலைவழித்தெளிப்பு முறைகள் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. டி.ஏ.பி., உரம் தெளிக்க ரூ.3.9 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பழநி, கணக்கன்பட்டி, ஆண்டிப்பட்டி கிராம தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் டி.ஏ.பி., உரம் இருப்புள்ளது. ஏக்கருக்கு 12.5 கிலோ தெளிக்க கூலி சேர்த்து ரூ.1300 செலவாகும். அதில் 50 சதவீதமானியமாக ரூ.650 வழங்கப்படும்.

இத்தொகை விவசாயிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. வேளாண் அலுலர் மீனாகுமாரி, துணை அலுவலர் துரைச்சாமி, உதவி அலுவலர்கள் சின்னமாணிக்கம், ஜாகீர் ஏற்பாடுகளை செய்தனர்.

## மரவள்ளிக்கிழங்கு அறுவடைவிற்பனைகுழு அதிகாரி ஆலோசனை

திண்டுக்கல்,:மரவள்ளிக்கிழங்கு அறுவடை, விற்பனை நிலை குறித்து வேளாண் விற்பனைகுழு அதிகாரி செல்வராஜ் கூறியதாவது: தமிழ்நாடு மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் 61.17 சதவிதம் பங்களிப்புடன நாட்டில் முதலிடம் வகிக்கிறது. மரவள்ளி நவம்பர்-டிசம்பர், மார்ச்-ஏப்ரல் மாதங்களில் நடவுப்பணி மேற்க்கொள்ளப்படும். பருவ மழைக்கு முந்தைய, பிந்தைய காலங்களில் அறுவடை செய்யப்படுகிறது. மரவள்ளிக்கிழங்கு டன்னிற்கு பண்ணை விலையாக ரூ.3600 முதல் ரூ.3800 வரை விற்கப்படுகிறது. மாவு 90 கிலோ மூட்டை ரூ.1600க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்தாண்டு இது ரூ.2500 வரை விற்கப்பட்டது. விவசாயிகளுக்கு நடப்பாண்டில் மரவள்ளிக்கிழங்கிற்கான விலை கடந்தாண்டைவிட குறைவாகவே கிடைத்தது. மரவள்ளி உற்பத்திக்கு சாதகமான பருவமழை, சாகுபடி பரப்பு அதிகரித்ததேயாகும். ஜனவரி-பிப்ரவரி 2016 மாதங்களில் அறுவடையாகும் மரவள்ளிக்கிழங்கிற்கு டன் ஒன்றுக்கு பண்ணை விலையாக ரூ.3700 முதல் ரூ.3900 வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. விலை உயர்விற்கான வாய்ப்பு குறைவாக உள்ளதால், விவசாயிகள் தங்கள் விற்பனை முடிவுகளை உடனடியாக எடுக்க வேண்டும், என்றார்.

## முட்டை விலை 355 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 355 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி,

மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 350 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு உயர்த்தி, 355 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாமக்கல் மண்டலத்தில், சீதோஷனம் மாற்றத்தால், முட்டை உற்பத்தி குறைந்து, தேவை அதிகரித்துள்ளது. அதன் காரணமாக முட்டை கொள்முதல் விலை உயர்ந்துள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 375, ஹைதராபாத், 348, விஜயவாடா, 346, பர்வாலா, 358, மும்பை, 388, மைசூர், 373, பெங்களூரு, 365, கொல்கத்தா, 385, டில்லி, 370. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 54 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டைக் கோழி விலையை, ஒரு ரூபாய் குறைத்து, கிலோ, 53 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பல்லடத்தில், நடந்த உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 57 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கறிக்கோழி விலையை, எவ்வித மாற்றமும் செய்யாமல், அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

## கள்ளக்குறிச்சியில் மக்களுக்கு நிலவேம்பு கஷாயம்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி நகராட்சி மற்றும் சுகாதார துறை சார்பில் பொதுமக்களுக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கும் சிறப்பு முகாம் நடந்தது. கள்ளக்குறிச்சி பஸ் நிலையத்தில் நடந்த முகாமிற்கு, நகராட்சி சேர்மன் பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். சுகாதார பணிகள் துணை இயக்குனர் கோவிந்தன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் பாபு முன்னிலை வகித்தனர். நகராட்சி ஆணையர் (பொறுப்பு) நக்கீரன் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் அழகுவேலுபாபு எம்.எல்.ஏ., பங்கேற்று, பொதுமக்களுக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கினார். மேலூர் வட்டார மருத்துவ அலுவலர் பங்கஜம், டாக்டர் வசந்த், சுகாதார மேற்பார்வையாளர் (பொறுப்பு) மகாலிங்கம், சுகாதார ஆய்வாளர்கள் பாலமுருகன், ரவிச்சந்திரன், கூட்டுறவு சங்க துணை தலைவர் புண்ணியமூர்த்தி, கவுன்சிலர் குட்டி, சி.எம்.எஸ்., துணை தலைவர் கோபி, செவிலியர்கள் குமாரி, வசந்தி, எல்சி உட்பட பலர் பங்கேற்றனர். சித்த மருத்துவர் ரவி நன்றி கூறினார்.

## நெல் நாற்றுகளுக்கு பாதுகாப்பு

பொன்னேரி:மழையால், நெற்பயிர்கள் வீணாகி வருவ தால், மீண்டும் நடவுப் பணிகளை மேற்கொள்வதற்காக விவசாயிகள் நாற்றுகளை பாதுகாத்து வருகின்றனர்.

ஆரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், பொன்னேரி அடுத்த வஞ்சிவாக்கம், கடப்பாக்கம், போலாச்சியம்மன்குளம் உள்ளிட்ட கிராமங்களில் நெல் பயிரிடப்பட்ட விளைநிலங்களை மழைநீர் சூழ்ந்தது.மழைநீர் வடியாததால், பயிர்கள் அழுகி வருகின்றன. இதனால், விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

இந்நிலையில், மீண்டும் நடவுப்பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ள விவசாயிகள், நாற்றாங்கால் பகுதியில் தண்ணீரில் மூழ்கி கிடந்த நெல் நாற்றுகளை பிடுங்கி எடுத்து, மேடான பகுதிகளில் பாதுகாத்து வைத்து உள்ளனர்.

விவசாயிகள் கூறுகையில், விவசாயம் செய்வதற்கு தேவையான அளவிற்கு, ஏரி மற்றும் குளங்களில் மழைநீர் தேங்கியிருக்கிறது. விளைநிலங்களில் மழைநீர் வடிந்தவுடன், மீண்டும் நடவுப்பணிகளை மேற்கொள்ள உள்ளோம்' என்றனர்.

## கரும்பு விவசாயிகளுக்கு நிதிசார் பயிற்சி முகாம்

அவலூர்பேட்டை: அவலூர்பேட்டையில் கரும்பு விவசாயிகளுக்கு நிதிசார் பயிற்சி முகாம் நடந்தது.

மேல்மலையனூர் ஒன்றியம், அவலூர்பேட்டையில் செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை , சர்வதேச நிதி கழகம் மற்றும் சாலிபாரிடெட் நிறுவனம் சார்பில் கரும்பு விவசாயிகளுக்கு நிதிசார் பயிற்சி முகாம் நடந்தது. கரும்பு துறை துணை தலைவர் ராஜேஷ் கண்ணன் தலைமை தாங்கினார்.

கரும்பு அலுவலர் அருள்செல்வம் முன்னிலை வகித்தார். இந்தியன் வங்கி ஓய்வு பெற்ற அதிகாரி மன்னார்மாதன் வரவு, செலவு கண்கு பராமரித்தல், வங்கி கடன் திட்டங்கள் , வட்டி விகிதங்கள், சொட்டு நீர் பாசனம் குறித்து பேசினார். இதில் களப்பணியாளர்கள் அய்யண்ணன், விநாயகம், கருணாகரன், மாணிக்கவேல் மற்றும் அவலூர்பேட்டை கோட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். விரிவாக்க அலுவலர் ஐயப்பன் நன்றி கூறினார்.

**தேர்தங்கால் சரணாலயத்தில் குவியும் வெளிநாட்டு பறவைகள்சீசன் துவக்கம்**



ராமநாதபுரம்: சீசன் துவங்கியுள்ளதால் ராமநாதபுரம் தேர்தங்கால் சரணாலயத்தில் வெளிநாட்டு பறவைகள் குவிந்துள்ளன.ராமநாதபுரம் வறட்சி மாவட்டமாக இருந்தாலும், ஏராளமான பெரிய கண்மாய்கள், குளங்கள் இயற்கையாக அமைந்துள்ளன. இவை பறவைகளின் புகலிடமாக உள்ளன. சித்திரங்குடி, காஞ்சிரங்குளம், மேலசெல்வனுார்-கீழசெல்வனுார், தேர்தங்கால், கரக்கோட்டை கண்மாய்களை பறவைகள் சரணாலயமாக அரசு அறிவித்துள்ளன.இங்கு அக்டோபர் முதல் ஜனவரி வரை பறவைகள் தங்குவதற்கான சீதோஷ்ண நிலை நிலவுகிறது. இதனால் இந்தியா மட்டுமின்றி வெளிநாட்டு பறவைகளும் அதிகளவில் வருகின்றன. சில பறவைகள் இனப்பெருக்கம் செய்து முட்டை பொறிக்கவும், சில பறவைகள் உணவுக்காகவும், சீதோஷ்ண நிலையை அனுபவிக்கவும் வருகின்றன. அக்டோபரில் போதிய மழை பெய்யாததால் பறவைகள் வரத்து இல்லாமல் இருந்தது. தற்போது தேர்தங்கால் கண்மாயில் ஓரளவு தண்ணீர் தேங்கியுள்ளதால் அதிகளவில் பறவைகள் வரத்துவங்கியுள்ளன. இதில் உள்நாட்டு பறவைகளோடு சைப்ரஸ் மற்றும் ஐரோப்பா நாடுகளை சேர்ந்த அரிய வகை பறவைகள் வந்துள்ளன.வன சரக அலுவலர் கணேசலிங்கம், வனவர் மதியழகன் கூறுகையில், “பறவைகளை கண்டுகளிக்க சுற்றுலா பயணிகளுக்கு டெலஸ்கோப் (தொலைநோக்கி) தருகிறோம். பறவைகளை பாதுகாக்க வேட்டை தடுப்பு காவலர்களை நியமித்துள்ளோம்,” என்றார்.

## வைகை அணை இன்று திறப்பு



ஆண்டிபட்டி :வைகை அணை நீர்மட்டம் 68 அடியை எட்டியுள்ள நிலையில் இன்று காலை 11.20 மணிக்கு பாசனத்திற்காக அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட உள்ளது.தேனி மாவட்டத்தில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு வரை பெய்த பலத்த மழையால் வைகை அணைக்கு நீர் வரத்து ஏற்பட்டது. கடந்த நவ.,24 ல் அணை நீர் மட்டம் 66 அடியை கடந்ததும், (மொத்த உயரம் 71 அடி) பாதுகாப்பு கருதி வைகை ஆற்றின் கரையோர மக்களுக்கு முதல் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது.அதன்பிறகு அணைக்கான நீர் வரத்து குறைந்தது. இதனால் அணை நிரம்புவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. நேற்று காலை நீர் வரத்து வினாடிக்கு 1376 கன அடியாக இருந்தது. மதியம் அணை நீர் மட்டம் 68.31 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து மதுரை, ஆண்டிபட்டி--சேடபட்டி குடிநீர் திட்டங்களுக்காக வினாடிக்கு 60 கன அடிநீர் திறக்கப்படுகிறது.இந்நிலை நீடித்தால் அடுத்த சில நாளில் அணை நிரம்பிவிடும். இந்நிலையில் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, இன்று காலை 11.20 மணிக்கு மதுரை, சிவகங்கை மாவட்டங்களின் பாசனத்திற்காக வைகை அணையை திறக்க பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.-

**மழையால் நீர் நிலைகள் சேதம் கணக்கெடுப்பு பணி துவக்கம்**

வடகிழக்கு பருவமழையால், தமிழக பொதுப்பணித் துறைக்கு ஏற்பட்டுள்ள சேத விவரங்களை கணக்கிடும் பணி துவங்கி உள்ளது.பொதுப்பணித் துறையின் அங்கமான நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில், 34 ஆற்று வடி நிலங்கள், 89 அணைகள், 14 ஆயிரம் ஏரிகள் உள்ளிட்ட நீர் நிலைகள் உள்ளன. இவற்றில் உள்ள அணைக்கட்டு, தடுப்பணை, கால்வாய், வாய்க்கால், செயற்கை முறை நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்புகளின் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு பணிகளை நீர்வளத் துறையினர் மேற்கொள்கின்றனர்.நான்கு ஆண்டுகளாக இந்த நீர் நிலைகளில், மத்திய, மாநில அரசுகளின் நிதி மட்டுமின்றி உலக வங்கி மற்றும், 'நபார்டு' வங்கி கடனுதவியுடன் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடகிழக்கு பருவமழையால், நீர் நிலைகளின் கட்டுமானங்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளன. ஆறுகள், ஏரிகள், கண்மாய்களின் கரைகள், பல இடங்களில் உடைந்துள்ளன; தடுப்பணைகள், அணைக்கட்டுகள் சேதமடைந்துள்ளன.நீர்வளத்துறை இவற்றை சீரமைக்க, அரசிடம் இருந்து நிதியுதவி பெற வேண்டும். வெள்ள நிவாரண நிதிக்காக, தமிழக அரசு, முதற் கட்டமாக, 500 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. மத்திய அரசும், முதற் கட்டமாக, 940 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதிலிருந்து நீர்வளத்துறை நிதியுதவி பெற்று, சேதமடைந்துள்ள நீர்வள கட்டமைப்புகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.இதற்கான சேத விவரங்களை கணக்கிடும் பணி துவங்கியுள்ளது. சென்னையில் ஆலோசனை நடத்திய பொதுப்பணித்துறை உயர் அதிகாரிகள், அந்தந்த மண்டல நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு, இது குறித்த அறிக்கையை, ஒரு வாரத்திற்குள் வழங்குமாறு உத்தரவு பிறப்பித்து உள்ளனர்.

## விளாத்திகுளம் பாகற்காய்க்கு தேவை குறைந்தபட்ச ஆதார விலை



துாத்துக்குடி: துாத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் விளையும் பாகற்காய்க்கு குறைந்த பட்ச ஆதார விலையாக கிலோவிற்கு 60 ரூபாய் வழங்க விவசாயிகள் வலியுறுத்திஉள்ளனர். துாத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பகுதியில் மானாவாரி பயிர்கள் 4.5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது. இதில் உளுந்து, பாசிப்பயறு, கம்பு, மக்காச்சோளம்,பருத்தி, சூரியகாந்தி பயிரிடப்பட்டுள்ளது. இதில் விளாத்திகுளம், முத்துச்சாமிபுரம்,சக்கனாபுரம்,சிவலார்பட்டி ஆகிய பகுதிகளில் 500 ஏக்கர் பரப்பளவில் பாகற்காய் பயிரிடப்பட்டுள்ளது.மழையால் பாதிப்பு: பாகற்காய் செடிகள் கன மழை காரணமாக மண்ணில் அதிகளவு ஈரப்பதம் காணப்படுவதால், வேர் பிடிப்பாக இல்லை. இதன் காரணமாக பாகற்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் மண் ஈரப்பதம் காரணமாக உளுந்து, பாசி பயறு, காய்கள் திரட்சி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.பாகற்காய்; தற்போது கொடிகளில் பூக்கள் பூத்து காய்கள் விளைச்சல் ஆரம்பித்துள்ளது. இந்த சீசன் இரண்டு மாதங்கள் வரை இருக்கும். விவசாயிகள் ஒரு நாள் விட்டு ஒருநாள் பறித்து வருகின்றனர். தற்போது அதிகளவில் மார்க்கெட்டில் பாகற்காய் வருகை

தருவதால், பாகற்காய் விலை வீழ்ச்சியடைந்து நாட்டுக்காய் கிலே 45 ரூபாய்க்கும், ஒட்டு ரகம் 35 ரூபாய்க்கும் விவசாயிகள் கொள்முதல் செய்கின்றனர்.

இது தவிர கமிஷனாக ஒரு ரூபாய்க்கு 10 காசுகள் எடுத்துக்கொள்கின்றனர். விவசாயிகளுக்கு நஷ்டம் தான் ஏற்படுகிறது. குறைந்த பட்ச ஆதார விலையாக பாகற்காய் கிலோவிற்கு 60 ஆக நிர்ணயிக்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது விளையும் பாகற்காய் மதுரை, கோவில்பட்டி மார்க்கெட்களுக்கு அனுப்பப் படுகின்றன.விளாத்திகுளம் பெருமாள் சாமி கூறியதாவது: பாகற்காய் மானாவாரி நிலங்களில் பயிரிடப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு சீசன் இருக்கும். அதிக பாகற்காய் வருவதால், விவசாயிகளிடம், வியாபாரிகள் கிலோ 35 ரூபாய்க்கு எடுத்து வருகின்றனர். இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. குறைந்த பட்சமாக கிலோவிற்கு 60 ரூபாய் நிர்ணயிக்க அரசு, வேளாண்துறை முன் வர வேண்டும், என அவர் தெரிவித்தார்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து தென்னங்கீற்று ஏற்றுமதி அதிகரிப்பு

கிருஷ்ணகிரி :கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்றுப் பகுதிகளில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. இதிலிருந்து பழுத்து விழும், தென்னை ஓலைகளில் இருந்து, தென்னங்கீற்று முடைதல் முக்கிய குடிசை தொழிலாக உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முடையும் தென்னங்கீற்றுகள், பெரும்பாலும் சென்னை உட்பட கடலோர மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றன.இந்நிலையில், 15 நாட்களுக்கும் மேல் சென்னை உட்பட கடலோர மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையால், ஆயிரக்கணக்கான குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த வீடுகளை மீண்டும் கட்டுவதற்காக, தென்னங்கீற்று தேவை

அதிகரித்துள்ளது. இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த இரண்டு மாதங்களாக முடைந்து வைக்கப்பட்ட தென்னங்கீற்றுகள், விற்பனைக்காக தற்போது அனுப்பப்பட்டு வருகின்றன. கடந்த மாதம், நான்கு முழம் அளவுள்ள, 22 கீற்றுகள் சேர்ந்த, ஒரு கட்டு, 50 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது இதே கட்டு, 60 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த பகுதியில் இருந்து மட்டும், தினமும், 20 லாரிகளில் தென்னங்கீற்று, சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வந்தது.தேவை அதிகரித்துள்ளதால், 150க்கும் மேற்பட்ட லாரிகளில் தென்னங்கீற்று அனுப்பப்பட்டு வருகிறது.

## அணில்கள் சரணாலயத்தில் மரக்கன்று நடும் பணி தீவிரம்

விருதுநகர்: பருவ மழையால் சாம்பல் நிற அணில்கள் சரணாலய பகுதியில் மரக்கன்றுகள் நடும் பணி நடந்து வருகிறது.கடந்த ஒரு வாரமாக பருவமழை பெய்த நிலையில் மேற்கு தொடர்ச்சி மலை வனப்பகுதியில் அதிகளவில் மரங்கள் நடப்பட்டு வருகின்றன. சாம்பல் நிற அணில்கள் சரணாலய பகுதிக்குட்பட்ட மதுரை மாவட்டம் சாப்டூர், விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்துார், ராஜபாளையம் வனப்பகுதிகளில் மூங்கில், அணில்களின் தீவன மரங்களான மா, புளி,தாணி, வாகை உட்பட மரக்கன்றுகள் நடும் பணி சில நாட்களாக நடந்து வருகிறது.விருதுநகர் மாவட்ட வனப்பாதுகாவலர் அசோக்குமார் கூறுகையில், “சாம்பல் நிற அணில்கள் சரணாலய பகுதியில் தற்போது 5 எக்டேரில் மூங்கில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும் அணில்கள் விரும்பி உண்ணும் மா, புளி என 2,000 மரக்கன்றுகள் நடப்படுகிறது,” என்றார்.

## மீன்வள கல்லுாரிக்கு பல கோடி ரூபாய் நஷ்டம்



துாத்துக்குடி: துாத்துக்குடியில் ஏற்பட்ட வெள்ளம் மீன்வள கல்லுாரியில் புகுந்ததில், பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்துள்ளன.கல்லுாரி முதல்வர் சுகுமார் தெரிவித்தாவது: மீன்வள கல்லுாரிக்குள் புகுந்த வெள்ளம் அனைத்து பகுதிகளிலும் சேதத்தை ஏற்படுத்தியது. அலுவலர்கள் உள்ளே செல்ல முடியவில்லை.ஆய்வுக்கூடங்களில் புகுந்த தண்ணீரால் மதிப்பு மிக்க உபகரணங்கள் சேதமடைந்துள்ளன. இவற்றின் மதிப்பு 3 கோடி ரூபாய். மீன் வளர்ப்பு குளங்கள் மூழ்கியதில், அதில் இருந்த பல ஆயிரம் மீன்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. தரை தளத்தில் மேஜைகள், நாற்காலிகள், கம்ப்யூட்டர்கள், புத்தகங்கள், மாணவர்களின் உடைகள் பாழாகியுள்ளன. ஆய்வகங்களுக்கும், துறைகளுக்கும் படகு மூலம் மட்டுமே செல்ல முடிகிறது. சரியான வடிகால்கள் இல்லாததால் தேங்கியுள்ளது. வெள்ள சேதத்திற்கு நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகத்திடம் கோரியுள்ளோம், தற்போது பம்பு செட் மூலம் தேங்கியுள்ள தண்ணீரை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, என்றார்.

### ராமநாதபுரத்தில் விளையுது சாலட் வெள்ளரி

ராமநாதபுரம்: ராமநாதபுரம் சுந்தரமுடையான் கடற்கரை பகுதியில் சாலட் வெள்ளரி சாகுபடி செய்யப்படுகிறது.இந்த வெள்ளரி குளிர் பிரதேசங்களில் விளையக் கூடியது. இதனை முதல் முயற்சியாக வெப்பம் மிகுந்த ராமநாதபுரத்தில் பயிரிட்டுள்ளனர். இவை கடற்கரை பகுதியான சுந்தரமுடையான் ஊரக வளர்ச்சி முகமையின் தோட்டக்கலை பண்ணையில் ஆயிரம் சதுர மீட்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குளிர் சீதோஷ்ண நிலையை உருவாக்க பாலிஹவுஸ் அமைக்கப்பட்டுள்ளது. சொட்டுநீர் பாசன முறையில் தண்ணீர் விடப்படுகிறது. தற்போது செடிகளில் சாலட் வெள்ளரிகள் காய்த்துள்ளன. ஒரு கொடியில் 6 காய்கள் வரை காய்க்கிறது. ஐந்து நாட்கள் வரை வதங்காமல் உள்ளது.தோட்டக்கலை உதவி இயக்குனர் நாகராஜன் கூறியதாவது: சாலட் வெள்ளரி சாதாரணமாக பயிரிட்டால் விளையாது. பாலிஹவுசில் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யலாம். இந்த வெள்ளரி 4 மாதங்களில் விளைச்சலுக்கு வரும். ஆயிரம் சதுர மீட்டரில் 15 டன் கிடைக்கும். ஒரு கிலோ ரூ.20 வரை விற்கலாம். இதன்மூலம் ரூ.2 லட்சம் வரை லாபம் கிடைக்கும். பாலி ஹவுஸ் அமைக்க ரூ.9.5 லட்சம் செலவானது. இந்த தொகையை 2 ஆண்டுகளில் பெற்றுவிடலாம், என்றார்.

## இன்று மிதமான மழை: நாளை கனமழை

சென்னை: 'வங்கக் கடலில் உருவாகியுள்ள, காற்று அழுத்த தாழ்வு நிலையால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், இன்று மிதமான மழை பெய்யும்; நாளை முதல், இரு நாட்களுக்கு கனமழை பெய்யும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை மைய இயக்குனர் ரமணன் நேற்று கூறியதாவது:வங்கக் கடலில், இலங்கை அருகே புதிய காற்று அழுத்த தாழ்வு உருவாகி உள்ளது. இது, மேற்கு நோக்கி நகர்ந்து, தமிழகத்தை நோக்கி வரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நிலவும் வானிலை

நிலவரப்படி, தமிழகத்தை நோக்கி எப்போது நகரும் என, கணக்கிட முடியாது.இருந்தாலும், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், இன்று மிதமான மழை பெய்யும்; நாளை முதல், இரு நாட்கள் கனமழை பெய்யும்.நேற்று காலை, 8:30 மணி நிலவரப்படி, தமிழகத்தில் அதிகபட்சமாக, காஞ்சிபுரம் மாவட்டம், கேளம்பாக்கம் - 4; திருவாரூர் மாவட்டம், குடவாசல் - 3; நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி - 2 செ.மீ., மழை பெய்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## மழையால் சரிந்தது வாழைக்காய் விலை

கனமழையால், வாழைமரங்கள் சேதமடைந்து உள்ளதால், வாழைக்காய் விலை வெகுவாக சரிந்துள்ளது.வாழை சாகுபடி அதிகமுள்ள திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூார், தஞ்சாவூர், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில், கனமழை பெய்து வருகிறது. இதனால், வாழைமரங்கள் சேதமடைந்து, பழம், பூ, தண்டு அதிகளவில் சந்தைக்கு வருகின்றன. சில வாரங்களுக்கு முன், ஐந்து ரூபாய்க்கு விற்கப்பட்ட வாழைக்காய், இப்போது, 2 - 3 ரூபாய்க்கும்; 10 முதல் 15 ரூபாய் வரை விற்ற, வாழைப்பூ மற்றும் வாழைத் தண்டு, ஐந்து ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. மழையால், சந்தைக்கு பிற காய்கறிகளின் வரத்து குறைந்துள்ள தால் அவற்றில் விலை அதிகரித்துள்ள நிலையில், வாழைக்காய், வாழைப்பூ, வாழைத்தண்டு அதிகளவில், பொதுமக்களால் வாங்கிச் செல்லப்படுகிறது.

## நெல் கொள்முதல் மையம் 19 இடங்களில் திறப்பு

மதுரை :மதுரை மாவட்டத்தில் 19 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்படவுள்ளன.மதுரையில் நேற்று நடந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் முருகன், திருப்பதி, கணேசன் நெல் கொள்முதல் மையங்களை திறக்க

வலியுறுத்தினர். இதற்கு பதிலளித்து கலெக்டர் சுப்பிரமணியன், நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் ரெகோபயம் கூறியதாவது: குறுவை நெல் சாகுபடி செய்யப்படும் 19 இடங்களில் கொள்முதல் மையங்கள் திறக்கப்படவுள்ளன. முதற்கட்டமாக தென்கரை, நாச்சிகுளம், கல்வேலிபட்டி, குமாரத்தில் திறக்கப்பட்டுள்ளது. இதுதவிர மாநிலத்தில் முதல் முறையாக வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் விவசாயிகளிடம் நேரடியாக நெல் பெறப்பட்டு, ஏலம் மூலம் விற்று, அவர்களுக்குரிய பணம் வழங்கப்படுகிறது, என்றார். நெல் ஏல விற்பனை குறித்து வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை செயலாளர் தவசுமுத்து விளக்கினார்.

**மூன்று நாட்களுக்கு மழை பெய்யும்: முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரம்**

புதுச்சேரி: புதுச்சேரியில் மூன்று தினங்கள் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கடற்கரைக்கு யாரும் வரவேண்டாம் என, ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கப்பட்டனர்.வட கிழக்கு பருவமழை கடந்த மாதம் 28ம் தேதி துவங்கி, தமிழகம், புதுச்சேரி பகுதியில் பல இடங்களில் அதிகமான மழை பெய்து வருகிறது. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுவடைந்து உள்ளதால், இன்று (28 ம் தேதி) முதல் மூன்று நாட்களுக்கு கனமழை பெய்யும் என்றும், 12 செ.மீ., வரை மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

முன்னெச்சரிக்கை

இதையொட்டி நேற்று முன் தினம் இரவு, அனைத்து துறை அதிகாரிகளுடன் மழை முன்னேற்பாடுகள் குறித்து கலெக்டர் மணிகண்டன் ஆலோசனை நடத்தினார். ஏற்கனவே பெய்த மழையால், சங்கராபரணி மற்றும் தென் பெண்ணையாற்றில், நீர் வரத்து அதிகமாக

உள்ளது. வீடூர் மற்றும் சாத்தனூர் அணைகளில் தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

மேலும் மழை தொடரும் என வானிலை அறிவித்துள்ளதால், புதுச்சேரியில் தாழ்வான மற்றும் நீர்நிலை ஓரங்களில் குடியிருக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என, கலெக்டர் எச்சரித்துள்ளார்.

தயார் நிலை

புதுச்சேரி அரசு துறைகளில் பணி புரிபவர்கள் 24 மணி நேரமும் தயாராக இருக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அவசர உதவிக்கு, காவல்துறை கட்டுப்பாட்டு அறை எண் 100, தீயணைப்பு கட்டுப்பாட்டு அறை எண் 101, அவசர ஊர்தி கட்டுப்பாட்டு அறை எண் 108 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை

மூன்று நாட்களுக்கு கடும் மழை பெய்யும் என்பதால், தாழ்வான பகுதியில் உள்ளவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். கடற்கரை பகுதியில் சுற்றுலா பயணிகள் வர வேண்டாம் என நேற்று காலை முதல் ஒலிபெருக்கி மூலம், நகராட்சி சார்பில் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

புதச்சேரியில் கடந்த 6ம் தேதி முதல் 75 செ.மீ., மழை பெய்து ஏரிகள், அணைகள் நிரம்பி வருகின்றன. அனைத்து மக்களும் பாதித்த நிலையில், மீண்டும் மூன்று நாள் மழை பெய்யும் என்ற அறிவிப்பு மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

## விவசாயிகளுக்கு பயிற்சி

வில்லியனுார்: ஒதியம்பட்டு உழவர் உதவியக விவசாயிகளுக்கு தோட்டப் பயிர் மற்றும் மாடி தோட்டம் அமைப்பது குறித்து இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

உழவர் உதவியக வேளாண் அலுவலர் கோகுலலட்சுமி வரவேற்றார். தோட்டகலை பயிர்களான பழங்கள், பூக்கள், காய்கறிகள் சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

வில்லியனூர் ஆத்மா திட்ட வட்டார தொழில் நுட்ப அமைப்பாளர் சாந்தி, இயற்கை வேளாண்மை, மண்புழு உற்பத்தி மற்றும் விவசாய குழுக்கள் அமைத்தலின் நன்மைகள் மற்றும் விற்பனை தகவல்கள் குறித்து பயிற்சியளித்தார். மத்திய அரசு கெயில் நிறுவனத்தின் வாப்ஸ் வேளாண் பயிற்சி மைய அலுவலர் அங்காளன் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை ஒதியம்பட்டு உழவர் உதவியக விரிவாக்க பணியாளர் கிருஷ்ணசாமி, லோகநாதன் செய்தனர்.

## நிலவேம்பு கஷாயம் வழங்கல்

புதுச்சேரி: தி.மு.க., சார்பில், நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது.

புதுச்சேரியில் பெய்த தொடர் மழையால், பல இடங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. எனவே, டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில், தி.மு.க., சார்பில், நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டு வருகிறது.

முதலியார்பேட்டை போலீஸ் நிலையம் எதிரில் நடந்த நிகழ்ச்சிக்கு, தொகுதி தி.மு.க., செயலாளர் திராவிடமணி தலைமை தாங்கினார். இளைஞரணி அமைப்பாளர் யூனுஸ், சுந்தரமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தனர்.

தெற்கு மாநில தி.மு.க., அமைப்பாளர் சிவா, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சுரேஷ், நிலவேம்பு கஷாயத்தை பொதுமக்களுக்கு வழங்கினர்.

உருளையன்பேட்டை: உருளையன்பேட்டை தொகுதியில் டெங்கு காய்ச்சலை தடுக்க, தி.மு.க., சார்பில், 22 மையங்களில் நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது.

கண்டக்டர்தோட்டம், ராஜா நகர், குபேர் நகர், சின்னப்பொய்கை, கல்வே பங்களா, கென்னடி நகர், கோவிந்தசாலை, முத்தமிழ்நகர், அருந்ததி நகர் உள்ளிட்ட 22 இடங்களில் நடந்த நிகழ்ச்சியில், தெற்கு மாநில அமைப்பாளர் சிவா கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கினார்.

**பாலாற்றில் கரைபுரண்டோடிய வெள்ளம் வினாடிக்கு... 33,000 கன அடி வீண்**

நீரை சேமிக்க அரசிடம் கட்டமைப்புகள் இல்லை'|கோரிக்கையை ஏற்றிருந்தால் தடுத்திருக்கலாம்

தடுப்பணை அமைக்க வேண்டிய இடங்கள்! செவிலிமேடுகாஞ்சிபுரம் அடுத்த செவிலிமேட்டில் தடுப்பணை அமைக்கப்பட்டால், செவிலிமேடு, தேனம்பாக்கம், விப்பேடு, பெரும்பாக்கம், மேல்கதிர்பூர், வளத்தோட்டம், குருவிமலை, விச்சாந்தாங்கல், களக்காட்டூர் என, 20க்கும் மேற்பட்ட கிராமங்களில், 5,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும். பழையசீவரம்

வேலுார் மாவட்டம், ஆற்காடு அருகே உள்ள, அணைக்கட்டு போல, பாலாறும், செய்யாறும் ஒன்றாக இணையும் இடமான பழையசீவரத்திலும், அணைக்கட்டு அமைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். இதனால், பாலாற்றில் நீர்வரத்து குறைந்தாலும், செய்யாற்றில் வரும் தண்ணீரை சேமிக்க முடியும்.

அதன்மூலம், திருமுக்கூடல், பழையசீவரம், அவலூர், வாலாஜாபாத், புள்ளம்பாக்கம், பாலூர், பழவேரி உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள, 10,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும்.திம்மாவரம்செங்கல்பட்டு அருகே உள்ள திம்மாவரத்தில், தடுப்பணை அமைக்கப்பட்டால், ஒரக்காட்டுபேட்டை, திம்மாவரம், பிலாப்பூர், அத்தியூர், ஆத்தூர், கவிதண்டலம், கரும்பாக்கம், கலியப்பேட்டை, வில்லியம்பாக்கம் என, 20க்கும் மேற்பட்ட கிராமங்களில், 7,000 ஏக்கர் விளைநிலங்கள் பயன்பெறும்.

பழையனூர்:பழையனூர் பகுதியில் தடுப்பணை கட்டப்பட்டால், திருக்கழுக்குன்றம் தாலுகாவிற்குட்பட்ட உதையம்பாக்கம், வேண்பாக்கம், சாலூர், எலுமிச்சம்பட்டு வல்லிபுரம் ஆகிய கிராமங்களும்; மதுராந்தகம் தாலுகாவிற்குட்பட்ட படாளம், பழையனூர், புலிப்பரகோவில், லஷ்மி நாராணபுரம் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள, 10,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும்.

ஈசூர்:ஈசூர் பகுதியில் தடுப்பணை அமைக்கப்பட்டால், புதூர், விலாகம், எரிவாக்கம், கீழவலம், இடையாத்தூர், திம்மூர் உள்ளிட்ட, 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள, 6,000 ஏக்கர் விளைநிலங்கள் பயன்பெறும். வாயலூர்:பாலாறு கடலில் கலக்கும் இடமான வாயலூரில், 100 கோடி ரூபாயில் அணைக்கட்டு கட்டப்படும் என்ற அரசின் அறிவிப்பு காற்றில் கரைந்துள்ளது. அந்த பகுதியில், அணைக்கட்டு அமைக்கப்பட்டால், அயப்பாக்கம், புரஞ்சேரி, வாயலூர், பொய்கைநல்லூர், நல்லாத்தூர்,

தண்டரை, நெரும்பூர் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில், 15,000 ஏக்கர் விளைநிலங்கள் பயன்பெறும்.

'நாலு தடுப்பணைக்கு பத்து ஆண்டுகளாக காத்திருப்பு'

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் காஞ்சிபுரம் மாவட்ட செயலர் நேரு கூறியதாவது:

காஞ்சிபுரம் மாவட்ட எல்லைக்கு உட்பட்ட பாலாற்றில், 4 இடங்களில் தடுப்பணைகளும்; 2 இடங்களில் அணைக்கட்டுகளும் கட்ட வேண்டும் என்பது விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை.

அரசிடம் இதுகுறித்து பல முறை மனு கொடுத்தும், எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் இதுதொடர்பாக, ஒவ்வொரு மாதமும் கோரிக்கை விடுத்து வருகிறோம். ஆனால், எந்தவித நடவடிக்கையும் இல்லை. 17 ஆண்டுகள் கழித்து பாலாற்றில் வந்த நீரை, பாதுகாக்க முடியாமல், வினாடிக்கு 33,000 கனஅடி நீர் வீணாக கடலில் கலந்து வருகிறது.நீரை சேமிக்க எந்த கட்டமைப்பையும் அரசு ஏற்படுத்தவில்லை. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றிருந்தாலாவது நீரை சேமித்திருக்கலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

விவசாயத்திற்கு தேவையான நீர் ஆதாரம் இல்லாததால், பல விவசாயிகள் மாற்று தொழிலை தேடி செல்கின்றனர். பாலாற்றில் தடுப்பணைகளை அரசு கட்டியிருந்தால், மழை பெய்து கிடைத்த தண்ணீரை சேமித்திருக்க முடியும். எங்களை போன்ற விவசாயிகள், கிடைத்த நீரை சேமிக்கமுடியாததால் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

கா,சிவப்பிரகாசம்செவிலிமேடு

ஆற்றில் தண்ணீரை சேமிக்க, தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்பது எங்களின் நீண்ட நாள் கோரிக்கை. ஆனால், இதுவரை தடுப்பணைகள் கட்டாததததால், பாலாற்றில் வந்த தண்ணீர் அனைத்தும், கடலில் கலந்து

வீணாகி வருகிறது. இதனால், விவசாயத்திற்கு தேவையான தண்ணீரை சேமிக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

சி.ஏழுமலை, காஞ்சிபுரம்

கடந்த பத்தாண்டுகளாக மழையின்றி வறண்டிருந்த செய்யாற்றில் கனமழையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இடம்: காஞ்சிபுரம்

அடுத்த மாகரல்.

### வினாடிக்கு 5,000 கனஅடி நீர் வெளியேற்றம்

செங்கல்பட்டு:மதுராந்தகம் ஏரியிலிருந்து, வினாடிக்கு 5,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. மதுராந்தகம் ஏரி, 609 மில்லியன் கனஅடி நீர் கொள்ளளவு கொண்டது. அதன் ஆழம் 21.3 அடி; கரையின் நீளம் 12,900 அடி; ஐந்து மதகுகள் உள்ளன.

தற்போது, திருவண்ணாமலை மாவட்டம், கிளியாறு, நெல்வாய் மடுவிலிருந்து இந்த ஏரிக்கு நீர்வரத்து கூடியுள்ளது. இதனால், ஏரியின் மொத்த உயரமான, 24.3 அடியில், 22.5 அடிக்கு தண்ணீர் உள்ளது.இதையடுத்து ஏரியின் பாதுகாப்பிற்காக, 23ம் தேதி, இந்த ஏரியிலிருந்து, 18,000 கனஅடி நீரும், 24ம் தேதி, 20,400 கனஅடி நீரும்; 25ம் தேதி, 17,600 கனஅடி நீரும்; 26ம் தேதி, 10,000 கனஅடி நீரும் வெளியேற்றப்பட்டது.

நேற்று, கிளியாறு, நெல்வாய் மடுவிலிருந்து வினாடிக்கு, 5,000 கனஅடி நீர் வந்ததால், அதே அளவு நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது என, பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

### இலவச கால்நடை மருத்துவ முகாம்

வெம்பக்கோட்டை : வெம்பக்கோட்டை அருகே ராமுதேவன்பட்டியில் 62வது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழாவை முன்னிட்டு, குண்டாயிருப்பு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். கூட்டுறவு ஒன்றிய மேலாளர் மாரியப்பன் முன்னிலை வகித்தார். கால்நடை டாக்டர் சுபாஷினி, கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தார். கூட்டுறவு விரிவாக்க அலுவலர் அய்யனார், நிர்வாக குழு ராமசுப்பிரமணியன், லட்சுமணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். சங்க செயலாளர் முத்துக்கண்ணன் நன்றி கூறினார். முகாமையொட்டி வெம்பக்கோட்டை ஒன்றிய முன்னாள் தலைவர் ரவிச்சந்திரன் மரக்கன்று நட்டார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

### கோயம்பேடு: காய்கறிக் கழிவு மூலம் மீண்டும் மின் உற்பத்தி தொடங்கப்படுமா?



சென்னை கோயம்பேடு சந்தையில் வீணாகும் காய்கறி உள்ளிட்ட கழிவுகள் மூலம் பெறப்பட்டு வந்த மின் உற்பத்தி கடந்த 6 மாதங்களாகத்

தடைப்பட்டுள்ளது.

இதை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என வியாபாரிகளும், பொதுமக்களுக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆசியாவிலேயே பெரிய சந்தையான கோயம்பேடு சந்தையில் தினமும் 100 முதல் 130 டன் வரை காய்கறிகள், பழங்கள், பூ கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. விழாக் காலங்கள், விசேஷ நாள்களில் 200 டன் வரை குப்பை கழிவுகள் அகற்றப்படுகின்றன. சந்தையின் பராமரிப்புப் பணிகளை சிஎம்டிஏ-வின் கட்டுப்பாட்டில் இயங்கும் கோயம்பேடு சந்தை நிர்வாகக் குழு (எம்.எம்.சி) மேற்கொண்டு வருகிறது.

குப்பைக் கழிவு மூலம் மின்சாரம்: சந்தையையொட்டிய பகுதியில் காய்கறி திடக்கழிவுகளில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம், கடந்த 2006-ஆம் ஆண்டு ரூ. 5 கோடியே 50 லட்சம் செலவில் தொடங்கப்பட்டது.

சந்தையில் தேங்கும் காய்கறிக் கழிவுகள் வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, அவற்றை "பீமா டையஜிஸ்டர்' என்கிற குடுவையில் போட்டு, அதிலிருந்து தயாரிக்கப்படும் பயோ மீத்தேன் வாயுவை, மற்றொரு கேஸ் ஹோல்டர் எனப்படும் பெரிய குடுவையில் சேகரித்து ஜெர்மனி இயந்திரத்தின் உதவியுடன் மின் உற்பத்தி நடைபெற்று வந்தது. இதன் மூலம் தினமும் 500 யூனிட் முதல் அதிகபட்சமாக 1,200 யூனிட் வரை மின் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

தொடர்ந்து பழுதாகும் இயந்திரம்: இந்த நிலையில் காய்கறிக் கழிவுகளை தரம் பிரித்து குடுவைக்குள் போடாததால், மீத்தேன் வாயுவுடன் சேர்த்து பிற வாயுக்களும் வெளியேறி இயந்திரத்தில் அடிக்கடி பழுது ஏற்பட்டது. குப்பை அள்ளும் பணியை மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனத்திடம் இந்தப் பணி கடந்த 2010-இல் ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும் கடந்த 2011 - 2014-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் காய்கறிக் கழிவு மூலம் குறிப்பிடத்தக்க மின் உற்பத்தி நடைபெறவில்லை.

இதையடுத்து கடந்த ஆண்டு செக் குடியரசு நாட்டிலிருந்து "பயோ மீத்தேன்' வாயு தயாரிக்கும் புதிய மேசிரேட்டர் கருவி வரவழைக்கப்பட்டு மீண்டும் மின் உற்பத்தி தொடங்கியது. இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் இந்த இயந்திரத்தில் மீண்டும் பழுது ஏற்பட்டது. ஆனால், 6 மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை இந்த இயந்திரத்தில் ஏற்பட்ட பழுது சரி செய்யப்படவில்லை.

எப்போது செயல்படும்? வீணாகும் கழிவுகளை திறம்பட பயன்படுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அரசின் சார்பில் அதிக செலவில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் சரியான வழிகாட்டுதல், பராமரிப்பு இல்லாததால் தொடர்ச்சியான மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியவில்லை என பொதுமக்களும், வியாபாரிகளும் புகார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும (சிஎம்டிஏ) அதிகாரி ஒருவர் கூறியதாவது:

காய்கறிக் கழிவுகளை அப்படியே பயன்படுத்த முடியாது. பாலித்தீன், பிளாஸ்டிக் ஆகியவற்றை தவிர்த்து தரம் பிரித்தது போக 20 முதல் 30 டன் கழிவுகளை மட்டுமே பயன்படுத்த முடியும்.

இந்த இயந்திரத்தின் மூலம் தினமும் 2 ஆயிரத்து 500 யூனிட் மின்சாரம் வரை உற்பத்தி செய்ய முடியும் என்றாலும், பழுது ஏற்படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு தினமும் 300 முதல் 500 யூனிட் வரை மின்சார உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் "பீமா டயஜிஸ்டர்' இயந்திரத்தில் பழுது ஏற்பட்டுள்ளது. இதைச் சரி செய்யும் பணி ரூ. 20 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள்தோறும் அதற்கான பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். விரைவில் இந்தப் பணி நிறைவடைந்ததும் காய்கறிக் கழிவு மூலம் மின் உற்பத்தி மீண்டும் தொடங்கப்படும் என்றார்.

### சென்னை ஏரிகளிலிருந்து திறந்துவிடப்படும் உபரி நீர் குறைப்பு

சென்னையில் உள்ள குடிநீர் ஆதார ஏரிகளுக்கு நீர்வரத்து குறைந்துள்ளதால் அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த 9-ஆம் தேதி முதல் பலத்த மழை பெய்ததால் அணைகள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகள் நிரம்பி வருகின்றன.

சென்னையைப் பொருத்தவரை புழல், சோழவரம், செம்பரம்பாக்கம், பூண்டி ஆகிய 4 ஏரிகளுக்கு அதிக அளவு தண்ணீர் வந்து கொண்டிருந்ததாலும், முழுக் கொள்ளளவை எட்டியதாலும் பாதுகாப்பு கருதி ஆறுகளில் உபரிநீர் திறந்துவிடப்பட்டது. அதிகபட்சமாக கடந்த 16-ஆம் தேதி செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நொடிக்கு 21,000 கன அடி நீரும், பூண்டி ஏரியிலிருந்து கடந்த 24-ஆம் தேதி நொடிக்கு 20,400 கன அடி நீரும் வெளியேற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்து, சென்னை சுற்றுப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக மழை பெய்யாததால் இந்த ஏரிகளுக்கு 250 கன அடி முதல் 1,100 கன அடி தண்ணீர் மட்டுமே வந்துகொண்டிருக்கிறது. இதையடுத்து வெள்ளிக்கிழமை நிலவரப்படி புழல் ஏரியிலிருந்து 1,550 கன அடி, செம்பரம்பாக்கம் ஏரியில் 1000 கன அடி, சோழவரம் ஏரியில் 500 கன அடி தண்ணீர் மட்டுமே உபரிநீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

பூண்டி ஏரியில் மட்டும் அதிகபட்சமாக நொடிக்கு 6,210 கன அடி நீர் வந்து கொண்டிருப்பதால், அதிலிருந்து நொடிக்கு 5,724 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இந்த 4 ஏரிகளின் மொத்த நீர் கொள்ளளவு 11 டிஎம்சி ஆகும். இவற்றில் தற்போது மொத்தம் 9.2 டிஎம்சி தண்ணீர் இருப்பு உள்ளது.

## துவரம் பருப்பு விலை மேலும் உயர வாய்ப்பு

துவரம் பருப்பு விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாக வேளாண் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய வேளாண் வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவுக்கு துவரம் பருப்பு விலை தற்போது அதிகரித்துள்ளது. தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால், சந்தைக்கு துவரம் பருப்பின் வரத்துக் குறைந்ததால், இந்த விலையேற்றம் உள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

விலையைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. கர்நாடகம் தவிர, அண்டை மாநிலங்களான தமிழகம், ஆந்திரம், தெலங்கானாவில் துவரம் பருப்பு விற்பனையில் 60 சதம் கர்நாடகத்தின் கலபுர்கி மாவட்டத்தில் விளைவிக்கப்படுகிறது.

தற்போது கலபுர்கி உள்ளிட்ட மாவட்டங்களில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், துவரம் பருப்பு விளைச்சல் குறைந்துள்ளது. இதன் காரணமாக துவரம் பருப்பு விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாக வேளாண் விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கலபுர்கி வேளாண் நிலையத்தின் பூச்சியியல் வல்லுநர் டாக்டர் இ.எல்.ஷெட்டி கூறுகையில், "கலபுர்கி மாவட்டத்தைச் சேர்ந்த அஃப்சல்பூர், ஜேவர்கி, ஆலந்த் வட்டங்களில்

பயிரிடப்பட்டிருந்த துவரைச் செடிகள் வறட்சியால் முழுமையாக நாசமடைந்தன.

சித்தாபுரா, கலபுர்கி வட்டங்களில் 25 சத துவரைச் செடிகள் கருகின. ஜூன் மாதத்தில் தென்மேற்குப் பருவமழை பெய்யாததால், பெரும்பாலான விவசாயிகள் துவரம் பருப்பை ஆகஸ்ட் மாதத்தில் விதைத்துள்ளனர்.

நவம்பர் மாதத்தில் கலபுர்கி மாவட்டத்தில் வழக்கமாக 20 மி.மீட்டர் மழை பெய்யும். ஆனால், இந்த முறை வெறும் 4 மி.மீ. மட்டுமே மழை பெய்துள்ளது. இதனால், துவரம் பருப்பு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மழையில்லாமல் விளை நிலங்கள் வறண்டுள்ளன.

சேடம், சின்சோலி வட்டங்களில் மட்டும் கணிசமான மழை பெய்துள்ளது. எனினும், இந்தப் பகுதியில் விளையும் துவரம் பருப்பு, தேவையை முழுமையாக நிறைவு செய்யாது. இதனால், துவரம் பருப்பு விலையில் இறக்கம் காண்பது அவ்வளவு சுலபமல்ல' என்றார்.

விலை சரிவு சாத்தியமற்றது: பெங்களூரு வேளாண் பல்கலைக்கழகத்தின் துவரை மற்றும் அவரை இனப்பெருக்க வல்லுநர் டாக்டர் எம்.பைரேகௌடா கூறுகையில், "கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் வட கர்நாடகத்தில் மழை பொய்த்து, கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. அதேநேரத்தில் கோலார், சிக்பளாப்பூர், பெங்களூரு நகரம், ராமநகரம், மண்டியா, தும்கூரு போன்ற தென் கர்நாடக மாவட்டங்களில் அதிக மழை பெய்துள்ளது. இதனால், அங்கு பயிரிடப்பட்ட காய்கறிகள் உள்பட துவரம் பருப்பு நிலுவை பயிரும் நாசமடைந்துள்ளன.

கர்நாடகத்தில் 6-8 லட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பில் ஆண்டுக்கு 3.5-5 லட்சம் டன் துவரம் பருப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. நிகழாண்டில் துவரம் பருப்பின் உற்பத்தி கணிசமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. எனவே, வழக்கமாக டிசம்பரில்

ஏற்படக்கூடிய விலை சரிவு, இந்தமுறை சாத்தியமற்றதாகியுள்ளது' என்றார்.

விலை குறைய வாய்ப்பு: பெங்களூரைச் சேர்ந்த துவரம் பருப்பு மொத்த வியாபாரிகள் சங்கத் தலைவர் ரமேஷ் சந்திரல ஹோட்டி, துவரம் பருப்பு விலையில் சரிவு காணப்படும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்.

அவர் மேலும் கூறுகையில், குஜராத்தில் நல்லமழை பெய்து, துவரம் பருப்பு உற்பத்தியும் திருப்திகரமாக உள்ளது. கர்நாடகத்தில் துவரம் பருப்பு உற்பத்தி சரிவைச் சந்தித்த போதும், குஜராத் மற்றும்

மகாராஷ்டிரத்தில் இருந்து துவரம் பருப்பு வரத்து கணிசமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதனால், டிசம்பரில் துவரம் பருப்பு விலை குறைய வாய்ப்புள்ளது. கடந்த ஆண்டு குஜராத்தில் பருவம் தவறி மழை பெய்ததால், துவரம் பருப்பு விளைச்சல் பாதிக்கப்பட்டது. இந்த முறை நிலைமை திருப்திகரமாக உள்ளது.

தற்போதைய நிலையில் 7 மில்லியன் டன் துவரம் பருப்பு தட்டுப்பாடு உள்ளது. இதைச் சமாளிக்க 9 மில்லியன் டன் துவரம் பருப்பை அரசு இறக்குமதி செய்துள்ளது. இதுமொத்த தேவையில் 40 சதமாகும் என்றார்.

சந்தை நிலவரம்: பெங்களூரு சந்தைக்கு தினமும் 15 ஆயிரம் டன் துவரம் பருப்பு வரத்து உள்ளது. இங்கிருந்து தென்கர்நாடகத்தின் இதர பகுதிகளுக்கு துவரம் பருப்பு அனுப்பி வைக்கப்படுகிறது. 50 கிலோ கொண்ட துவரம் பருப்பு மூடை ரூ.6000-ரூ.8000 வரை விற்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு கிலோ ரூ.120-க்கும், உயர்தர இந்திய பருப்பு கிலோ ரூ.150-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## பருவமழையால் நிரம்பிய கடம்பாடி ஏரி



மாமல்லபுரம், கடம்பாடி ஏரியில் தண்ணீர் நிரம்பியதைக் கண்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த 20 நாள்களுக்கும் மேலாக வடகிழக்கு பருவமழை கொட்டியதில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டைச் சுற்றியுள்ள பெரும்பாலான ஏரிகள் நிறைந்தன. கடம்பாடி ஏரியில் ஆண்டுதோறும் பெய்யும் பருவமழையில் ஏரிநிறைந்து தண்ணீர் வெளியேறும். இந்த ஆண்டு அனைத்து ஏரிகளும் நிரம்பி வழிந்தன. பெரும் பரப்பளவு கொண்ட கடம்பாடி ஏரியும் நிரம்பி, உபரிநீர் கலங்களில் வெளியேறுகிறது. இதைக் கண்டு அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தவிர, மாமல்லபுரம் வரும் சுற்றுலாப் பயணிகளும் கடம்பாடி ஏரிக்கு வருகை தருகின்றனர். ஏரியின் கலங்கள் வழியாக வெளியேறும் மீன்களைப் பிடிப்பதற்கு பலர் அங்கு தூண்டில்களுடன் குவிந்துள்ளனர். சிறுவர்கள் நீரில் விளையாடி மகிழ்கின்றனர். அங்கு தகுந்த பாதுகாப்புத் தடுப்பு அமைக்க அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டால், ஏரி நீரில் மூழ்கி சிறுவர்கள் இறக்கும் சம்பவங்களைத் தடுக்க முடியும்.

**கொப்பரை விலை வீழ்ச்சியால் தென்னை விவசாயிகள் கவலை**

கொப்பரை விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால் தென்னை விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை ஒன்றியப் பகுதியில் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளன. இங்கு விளைவிக்கப்படும் இளநீர், தேங்காய் உள்ளிட்டவைகள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், வெளிமாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

மேலும், இப்பகுதியில் உள்ள 200க்கும் மேற்பட்ட உலர் களங்களுக்கு தேங்காய் னுப்பப்பட்டு கொப்பரையாக மாற்றப்படுகிறது. காங்கயம்,

வெள்ளக்கோவில் பகுதியில் எண்ணெய் உற்பத்தி ஆலைகள் அதிகம் உள்ளன. இங்கு உற்பத்தியாகும் எண்ணெய் இந்தியா முழுவதும் விற்பனைக்கு அனுப்பப்படுவதோடு உலக நாடுகள் பலவற்றுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

பல்லடம், பொள்ளாச்சி, செஞ்சேரி பகுதிகளில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் நிலையங்களில் கொப்பரை கொள்முதல் விலை கிலோ ரூ 59.40ஆக நிர்ணயிக்கப்பட்டு

ள்ளது. அரசு கொள்முதல் நிலையங்களை விடவும் காங்கயம், வெள்ளக்கோவில் போன்ற பகுதிகளில் உள்ள தனியார் எண்ணெய் உற்பத்தி நிறுவனத்தினர், வெளிச்சந்தையில் இருக்கும் நுகர்வைப் பொருத்து நல்ல விலை கொடுத்து விவசாயிகளிடம் கொப்பரையை கொள்முதல் செய்கின்றனர். தற்போது கொப்பரை கிலோ ரூ. 68 என தனியார் கொள்முதல் விலை நிலவுகிறது. இதன் காரணமாக விவசாயிகள் தனியார் எண்ணெய் உற்பத்தி நிறுவனத்தினரிடம் கொப்பரையை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளாக நிலவிய கடும் வறட்சியால் திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் தண்ணீர் இன்றி காய்ந்து பட்டுப்போயின. இதனால் தேங்காய் உற்பத்தி குறைந்தது. எண்ணெய் உற்பத்திக்கு மூலபொருளான கொப்பரை வரத்து குறைவால், கொப்பரை விலை உயர்ந்தது.

தற்போது மாவட்டத்தில் தொடர்ந்து நல்ல மழை பெய்து இருப்பதால் தேங்காய் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தேங்காய், கொப்பரை விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது. கடந்த ஏப்ரல் மாதம் வெளிச்சந்தையில் ரூ. 100 ஆக இருந்த கொப்பரை கொள்முதல் விலை கடந்த மாதம் ரூ. 75ஆக குறைந்தது.

இது குறித்து வாவிபாளையம் தென்னை விவசாயி பி.சோமசுந்தரம் கூறியது:

பல்லடம், சுல்தான்பேட்டை, பொங்கலூர் பகுதியில் நாள் ஒன்றுக்கு 250 டன் கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக பெய்து வரும் தொடர் மழையால் கொப்பரை களங்கள் ஈரமாகவும், மழைநீர் தேங்கியும் உள்ளது. கொப்பரைகளை காய வைப்பதற்கான சீதோஷ்ண நிலையின்றி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் கொப்பரைத் தொழிலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை செய்து வந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு தாற்காலிக வேலையிழப்பு ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் 10 ஆயிரம் டன் கொப்பரை உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது. பரவலாக நல்ல மழை பெய்ந்துள்ளதால்,தென்னையில் காய்ப்புத் திறன் குறைந்த மரங்கள் கூட, உயிர் பிடித்து காய்க்கத் துவங்கியுள்ளது. இதன் காரணமாக வெளிசந்தைக்கு வழக்கமாக வரும் தேங்காய் மற்றும் கொப்பரையை விடவும், ஒரு மடங்கு கூடுதல் வரத்து இருக்கும். இதனால் தேங்காய் மற்றும் கொப்பரை விலை மேலும் குறைய கூடிய சூழ்நிலை உள்ளது.

இதனால் தென்னை விவசாயிகளுக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் நிலை உள்ளது. தென்னை விவசாயிகளைப் பாதுகாக்க ஒரு கிலோ கொப்பரை ரூ. 100 என விலை நிர்ணயம் செய்து அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்றார்.

**கடன் வாங்கித் தவிப்பு**

நல்ல விலை கிடைக்கும்போது விற்கலாம் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் செஞ்சேரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பல ஆயிரக்கணக்கான கொப்பரை மூட்டைகளை இருப்பு வைத்து ரூ. 30 லட்சம் வரை பொருளீட்டுக் கடன் பெற்றனர். கொப்பரைக்கு நல்ல

விலை கிடைக்கும் என்று காத்திருந்த நிலையில் தற்போது அதன் விலை படிப்படியாக குறைந்து ரூ. 68 ஆக இருப்பதால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தொடர் விலை சரிவால் பொருளீட்டு கடன் பெற்றுள்ள விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

### இயந்திர நாற்று நடவுப் பணி துவக்கம்

உடுமலை வட்டாரத்தில் அரசு மானியத்துடன் கூடிய இயந்திர நாற்று நடவுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

உடுமலை வட்டாரத்தில் தற்போது பிஏபி பாசனப் பகுதிகளில் நெல் நடவுப் பணிகள் தொடங்கியுள்ளன. இந்நிலையில் நெல் சாகுபடியில் நாற்றங்கால் முதல் அறுவடை வரையிலான பணிகளுக்கு தேவைப்படும்போது வேலை ஆள்கள் கிடைப்பதில்லை. இதனால், விவசாயிகள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

இதைக் கருத்தில் கொண்டு இயந்திரத்தின் மூலம் நாற்று நடவுப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது குறித்து உடுமலை வட்டார வேளாண் உதவி இயக்குநர் மகாலிங்கம் கூறியது: தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் 2015-16-ன் கீழ் இயந்திர நாற்று நடவுப் பணி களை ஊக்குவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, ஒரு ஹெக்டேருக்கு ரூ. 3,000 பின்னேற்பு மானியம் வழங்கப்படும். ஒரு விவசாயி 2 ஹெக்டேர் வரை மானியம் பெறலாம். இது தொடர்பாக விவசாயிகள் உடுமலை வட்டார வேளாண் அலுவலகத்தை அணுகலாம் என்றார்.

### மரம் வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு

திருப்பூரில் பள்ளி மாணவர்களுக்கு மரம் வளர்ப்பதன் அவசியம் குறித்து வெள்ளிக்கிழமை விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பசுமை பாரதம் அமைப்பின் சார்பில் திருப்பூரில் உள்ள தனியார் மெட்ரிக் பள்ளியில் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு பள்ளியின் முதல்வர் மணிகண்டன் தலைமை வகித்தார். திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க துணைத் தலைவர் பழனிச்சாமி, சி.ஐ.ஐ.,அமைப்பின் மாநில கவுன்சில் குழு உறுப்பினர் ராஜா சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், தன்னார்வலர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், ஓய்வு பெற்ற வன அலுவலர்கள், மாறி வரும் பருவ நிலை மாற்றம், மரம் வளர்ப்பதன் அவசியம் குறித்துப் பேசினர். அதைத் தொடர்ந்து "இயற்கையைக் காப்போம்' குறும்படம் திரையிடப்பட்டது. திருப்பூர், ஊத்துக்குளி பகுதிகளைச் சேர்ந்த அரசு, தனியார் பள்ளிகளைச் சேர்ந்த சுற்றுச்சுழல் மன்ற மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். இதில், பங்கேற்ற அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

### தென்னைப் பொருள்கள் மதிப்புக் கூட்டுதல் கருத்தரங்கம்

காங்கயம் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கூட்ட அரங்கில், தென்னைப் பொருள்கள் மதிப்புக் கூட்டுதல் தொடர்பான கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கருத்தரங்கில், காங்கயம் பகுதியைச் சேர்ந்த தேங்காய் களம் மற்றும் எண்ணெய் ஆலை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர். வேளாண் அலுவலர் மணிவேல்முருகன் வரவேற்றார். இதில், தென்னை வளர்ச்சி வாரியத்தின் திட்டங்கள் குறித்து வேளாண்மை துணை இயக்குநர் சுப்பிரமணியம் விளக்கினார். தென்னை சார்ந்த பொருள்களின் மதிப்பைக் கூட்டுவது குறித்து தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குநர் பாலசுந்தரி விளக்கினார்.

மேலும், தேங்காய் பவுடர் தயாரித்தல், தேங்காய் மிட்டாய், சாக்லேட், குக்கீஸ் தயாரிப்பது குறித்து உணவு பதப்படுத்தல் பொறியாளர் ப்ரியா

விளக்கமளித்தார். அக்மார்க் தர நிர்ணயம் பற்றியும், பொருள்களுக்கு அக்மார்க் முத்திரை பெறுவது பற்றியும் அக்மார்க் வேளாண் அலுவலர் குணசேகரன் எடுத்துரைத்தார்.

உதவி வேளாண் அலுவலர் சிவகுமார், உதவி வேளாண்மை அலுவலர் சத்யநாராயணன் ஆகியோர் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தினகரன்

**கட்டுப்பாடு ஏதும் இல்லாததால் பண்ணை மீன்களால் ஆபத்து**




திருப்பதி: வாரிக்கொடுத்த வள்ளல்கள், வந்தாரை வாழ வைத்தவர்கள் என நம் முன்னோர் சிலரை வாழ்த்த நாமும் கேட்டிருக்கிறோம். தலைச்சுமையாக பொருட்களை எடுத்துச்செல்வோர் இளைப்பாற சுமை தாங்கி கற்களை போட்டுவைத்தும், வழிநெடுக மரங்களை நிழலுக்காக வைத்தனர் நமது முன்னோர்கள். கொடுப்பதை தவிர வேறெதையும் முன்னோர்கள் செய்ததும் இல்லை, நமக்கு சொல்லிக்கொடுக்கவும் இல்லை. ஆனால், காலமாற்றம் எல்லாவற்றையும் தலைகீழாய் புரட்டி போட்டு விட்டது. ஐம்பூதங்களும் அனைவருக்கும் சொந்தம் என்று

கவிஞர்கள் பாடியதும் உண்டு. ஆனால் இன்று காற்றை கூட விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். எதை செய்தாலும் அதில் பணம் பார்க்க முடியுமா, 5 ரூபாய் செலவழித்து 500 ரூபாய் சம்பாதிக்க முடியுமா என்று யோசிக்கும் நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டுவிட்டான். அள்ளிக்கொடுத்தது எல்லாம் அந்தக்காலம். அள்ளிக்கொடுத்ததை பிடுங்கிக்கொள்வது இந்தக்காலம் என சொல்லும் அளவுக்கு இன்றைய வாழ்க்கை நடைமுறை சுயநலத்தை அடிப்படையாக கொண்டதாகி விட்டது. சேவையாய் செய்த சில விஷயங்கள் எல்லாம் இன்று தொழிலாய் மாறிவிட்டது. நெடுந்தூரம் பயணமாய் வருபவர்கள் யார் வீட்டு திண்ணையிலாவது அமர்ந்து களைப்பாறும் போது அந்த வீட்டு உரிமையாளர் அவர்களுக்கு உணவளித்து உபசரித்து அனுப்பிய நிகழ்வுகள் எல்லாம் ஒரு காலம். இப்போதெல்லாம் தவறிக்கூட எங்காவது இளைப்பாற அமர்ந்து விட்டால், நம் உடமைகளையும் விட்டுவைக்காமல் அனைத்தையும் சுருட்டிக்கொண்டு ஓடும் கூட்டமும் ஒவ்வொருவர் பின்னாலும் சுற்றி வருகிறது. உணவே மருந்தாய் இருந்த காலம் போய் தற்போது மருந்தே உணவாகிப்போனது. எந்த உணவை உட்கொண்டாலும் அதில் ரசாயன தன்மை உள்ளது என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். காரணம், இயற்கையில் கிடைக்கும் அனைத்து பொருட்களையும் செயற்கையில் தயாரிக்க பலர் தயாராகிவிட்டதுதான் முக்கிய காரணம். காலநேரம் பார்த்து பயிரிட்டு அறுவடைசெய்தது எல்லாம் மலையேறிப்போய்விட்டது. விளைநிலங்களும் விலை நிலங்களாய் குடியிருப்புகளாய் மாறிப்போனதன் விளைவு இருக்கும் நிலத்தில் எல்லாருக்கும் உணவை வழங்க வேண்டிய நிலைக்கு பூமித்தாய் தள்ளப்பட்டுள்ளாள்.

இதனால் பருவத்துக்கு ஏற்ப பயிரிட்டு காய்கறிகளையும், பழங்களையும் அறுவடைசெய்துவந்த காலத்தை நாம் இப்போதெல்லாம் ஏடுகளில்தான் படித்து தெரிந்துகொள்ளவேண்டும். நெற்பயிரை அதனுடைய வளர்ச்சிக்காலம் முடியும் வரை அதை பராமரித்து வந்தால் மட்டுமே அதன்பலன் நமக்கு கிட்டும். நெல்லுக்கு மட்டுமல்ல எந்தவகை

பயிருக்கும் இது பொருந்தும். இது விவசாயம்தான் என்பது இல்லாமல் மனிதன் உணவாக கொள்ளும் அசைவத்திலும் புகுந்துவிட்டது. ஒரு காலத்தில் வெள்ளாட்டுக்கறி, நாட்டுக்கோழி, நாட்டுமுட்டை, பன்றி, மீன், காடை, கவுதாரி என்று இயற்கையோடு வளர்ந்து வந்த இறைச்சி வகைகளை உண்ட மனிதனுக்கு இன்று அவற்றிலும் செயற்கை புகுந்து பாடாய்படுத்தி வருகிறது. இருக்கும் மக்களுக்கு இயற்கையாய் வளரும் அசைவ உணவுக்கான மிருகங்கள் கூட நவீன விஞ்ஞானம் என்ற பேரில் ரசாயனம் மூலம் வளர்த்து உணவாக்கப்படும் கொடுமை நடந்து வருகிறது. நாட்டுக்கோழிக்கு பதில் வெள்ளை லெகான், வெள்ளை முட்டை, வெண்பன்றி என்று எல்லாமே செயற்கை மருந்துகளால் வளர்க்கப்படும் இவற்றின் இறைச்சிதான் உணவு சந்தையை ஆக்கிரமித்துள்ளது. கோழி இறைச்சியை பொறுத்தவரை நாட்டுக்கோழி கறிக்குழம்பை மட்டுமே அறிந்திருந்த நம்முன்னோருக்கு தற்போது கறிக்காகவே கோழிகள் வளர்க்கப்படுவது ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. கறிக்காகவே வளர்க்கப்படும் கோழிகள் ஊசி மூலம் கறிக்கு தயார் செய்யப்படுகிறது என்பது எத்தனை பேருக்கு தெரியும்? இந்த பட்டியலில் இப்போது மீன்களும் சேர்ந்துள்ளன.

இயற்கைக்கு மனிதன் செய்த தீங்கால் நீர்நிலைகள் வறண்டு கிடந்தன. இதனால் இயற்கையாய் கிடைத்து வந்த மீன்கள் இன்று செயற்கை பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு மார்க்கெட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த பண்ணை மீன்கள்தான் இன்று மனிதனின் உயிரோடு விளையாடும் நிலைக்கு வந்துள்ளன. பெரும்பாலான மீன் பண்ணைகளில் இறந்த விலங்குகளின் உடல்கள், கோழி, ஆடு, மாடு இறைச்சி கழிவுகள், ஓட்டல்களில் மிகுதியான கெட்டுப்போன உணவுகள் ஆகியவை குறைந்த விலையில் வாங்கப்பட்டு மீன்களுக்கு உணவாக போடுவதால் அவற்றின் நோய்தொற்று மீன்கள் மூலம் அதை உண்ணும் மனிதனும் பரவும் என்ற அதிர்ச்சி தகவல்தான் மக்களையும், சமூக ஆர்வலர்களையும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது. பொதுவாக மீன்

பண்ணை நடத்துபவர்களுக்கு மீன்வளத்துறை மூலம் கட்டளையில்லா வழிகாட்டுதல்கள் என்பது உண்டு. யார் வேண்டுமானாலும் விவசாய நிலங்களிலோ அல்லது தனியாக அதற்கென இடத்தை வாங்கியோ மீன்பண்ணைகள் நடத்திக் கொள்ளலாம். மீன்வளத்துறையின் ஆலோசனை பெற்று மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் பதிவு செய்பவர்களுக்கு மீன்வளத்துறை சரியான வழிகாட்டுதல்களையும், மீன்குஞ்சுகளையும் வழங்கும். மேலும் இதில் மீன்பண்ணை குட்டை நடத்துபவர்களுக்கு மானியமும் உண்டு. ஆனால், தன்னிச்சையாக தொடங்கும் மீன்பண்ணைகளே வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் அதிகளவில் உள்ளன. அதேபோல் சித்தூர் மாவட்டத்திலும் அதிகளவில் மீன்பண்ணைகள் உள்ளன. பண்ணையில் வளர்க்கப்படும் மீன்களுக்கு என தனி ஊட்டச்சத்து உணவுகள் உண்டு. இத்தகைய ஊட்டச்சத்துக்களை வழங்கி வளர்க்கப்படும் மீன்களால் எந்த பாதிப்பும் இல்லை. ஆனால் சில பண்ணைகளில் மீன்களை குறுகிய காலத்தில் வளர்த்து அதை விற்று காசு பார்த்துவிடவேண்டும் என மேற்கண்ட கோழி இறைச்சி, ஆடு மற்றும் மாட்டிறைச்சி கழிவுகள், இறந்த விலங்குகள், திருமண மண்டபங்கள், ஓட்டல்களில் இருந்து பெறப்படும் கெட்டுபோன உணவுகளை போட்டு வளர்க்கின்றனர். அதாவது மீன்களுக்கு என பிரத்யேக உணவுகள் தயாரிக்கப்பட்டு அதற்கான அரசு துறைகளில் விற்கப்படுகிறது. இவை தவிர சில பண்ணை உரிமையாளர்கள் கோழிக்கழிவுகளை மீன்களுக்கு உணவாக வழங்கி வருகின்றனர். மேலும் சிலர் இறைச்சிக்கழிவுகள், தேவையற்ற கழிவுகளை மீன்களுக்கு போட்டு அதன் எடையை கூட்டி விற்பனை செய்கின்றனர். அப்படியிருக்கும்போது அந்த உணவுகள் துர்நாற்றம் வீசத்தொடங்கிவிடும். நச்சுத்தன்மையாக மாறிய உணவை மீன்கள், சாப்பிடும்போது அவற்றுக்கு தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது அந்த மீன்களை மனிதன் சாப்பிடும்போது என்னவாகும் என்பதை நாமே புரிந்துகொள்ளவேண்டும்.

இதுகுறித்து விஜயவாடாவில் மீன்பண்ணை வைத்துள்ள உரிமையாளர் ஒருவர் நம்மிடம் கூறுகையில், ‘கடந்த 5 ஆண்டுகளாக மீன் வளர்த்து வருகிறேன். இதில் உள்ள கஷ்ட நஷ்டங்களை அறிந்திருக்கிறேன். மீன்களுக்கு அரசு அதிகாரிகள் சொல்லும் உணவு வழங்கவேண்டுமானால் ஒரு நாளைக்கு ரூ.2 ஆயிரம் செலவாகிறது. அதனால் நாங்கள் திருமண மண்டபங்கள், ஓட்டல்கள், விடுதிகளில் மீதமான உணவுகளை வாங்கிவந்து மீன்களுக்கு உணவாக கொடுக்கிறோம். இந்த உணவு ஒரு பேரல் ரூ.225 ஆகிறது. தினமும் 6 பேரல்கள் வாங்குகிறோம். இதனால் மீன்கள் நச்சுத்தன்மை அடைவதாக கூறுகின்றனர். அதற்கும் நாங்கள் ஒரு தந்திரத்தை வைத்துள்ளோம். வளர்க்கப்படும் மீன்கள் சந்தைக்கு கொண்டுசெல்வதற்கு ஒரு வாரத்துக்கு முன்பே உணவுக்கழிவுகளை மீன்களுக்கு போடுவதை நிறுத்திவிட்டு முறையான உணவுகளை வழங்குவோம். அப்போது அதிகாரிகள் அந்த மீனை பரிசோதித்தால் கூட எங்கள் மீன்களை நச்சுத்தன்மை உடையதாக கண்டுபிடிக்கமுடியாது. மேலும் கடையில் இருந்து அதை வாங்கி செல்லும் பொதுமக்களுக்கும் இந்த சந்தேகம் வராது. தவறுதான் என்ன ெசய்வது இது வியாபாரம் ஆச்சே’ என்றார். எனவே, மீன்பண்ணைகளை கண்காணித்து மக்களுக்கு பாதிப்பில்லாத மீன்களை உற்பத்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுப்பதுடன், முறைகேடுகளில் ஈடுபடும் மீன்பண்ணை உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### அதிகரித்து வரும் காற்று மாசு

**டெல்லியில் புகை கலந்த பனிமூட்டம் நிலவும்: வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை**




புதுடெல்லி: டெல்லியில் காற்று மாசு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் காலை நேரங்களில் புகை கலந்த பனிமூட்டம் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. டெல்லியில் இயக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வாகனங்களில் இருந்து வெளியேறும் புகையால் காற்றின் தரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தலைநகர்வாசிகள் ஆஸ்துமா, நுரையீல் பாதிப்பு உள்ளிட்ட சுவாச கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். தீபாவளியை முன்னிட்டு பட்டாசு வெடிக்கப்பட்டதால் காற்று மாசு மேலும் உயர்ந்துள்ளது. சுற்றுச்சூழல் மாசு தொடர்ந்து நிலவி வருவதால், டெல்லியில் புகை கலந்த பனிமூட்டம் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

எதிரே வாகனங்கள் வருவது தெரியாத அளவுக்கு பனி மூட்டம் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனந்த் விகார் பகுதியில் ஆபத்தான (severe) நிலையில் காற்றின் தரம் உள்ளதாவும், மாநிலத்தின் பிற பகுதிகளில் மோசம் (poor) மற்றும் படுமோசமான (very poor) நிலையில் காற்றின் தரம் அமைந்துள்ளதாகவும் தேசிய காற்று தர நிர்ணய அமைப்பு தெரிவித்துள்ளது. காற்றில் கலந்துள்ள நுண் துகள்கள் பி.எம்.2.5 மற்றும் பி.எம்.10 ஆகியவற்றின் அடிப்படையில் தரம் கண்டறியப்படுகிறது.

இதில் ஒரு கியூபிக் மீட்டர் இடப்பரப்பளவில் பி.எம்.2.5 துகள் 60 மைக்ரோ கிராமும், பி.எம் 10, 100 மைக்ரோ கிராம் அளவில் இருந்தால் அது ஏற்றுக் கொள்ளத்தக்கது. பி.எம்.2.5 253 மற்றும் பி.எம்.10 421 மைக்ரோ கிராம் என்ற அளவில் இருந்தால் ஆபத்தானதாகும்.

தற்போது ஆனந்த் விகார் பகுதியில், காற்றின் தரம் ஆபத்தான நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறுகையில், ''டெல்லியில் வரும் நாட்களில் புகை கலந்த பனிமூட்டம் நிலவ அதிக வாய்ப்புள்ளது. பனி மூட்டம் காரணமாக விமான சேவை பாதிக்கப்படலாம். காற்றில் கலந்துள்ள தூசுகள் சிதறி செல்லும் அளவுக்கு போதுமான அளவில் காற்று வேகமாக வீசவில்லை.'' என்றார். காற்றில் கலந்துள்ள பென்சீனின் அளவு நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகளவில் உள்ளதாக டெல்லி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது. அநேக இடங்களில், பி.எம் 2.5 மற்றும் பென்சீன் அளவு முறையே 357, 22 ஆக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு கியூபிக் மீட்டர் இடத்தில் 5 மைக்ரோ கிராமே பென்சீனின் நிர்ணயிக்கப்பட்ட அளவு.

**துபாயில் பிரம்மாண்ட மலர் பூங்காவில் குவிந்த சுற்றுலா பயணிகள்**



துபாய்: வளைகுடா என்றதும் பலருக்கு நீண்ட பாலைவனம் நினைவுக்கு வரும் ஆனால் மலர்களும், மரங்களும் நினைவிற்கு வரும் வகையில் வளைகுடா நாடுகளின் நகரங்களில் ஒன்றான துபாயில் மரம், செடிகளோடு இயற்கை சூழலை உருவாக்க முயற்சிகள் பல மேற்கொண்டு இது குளிர் பிரதேசமா என நினைக்க செய்யும் வகையில் அழகிய தோட்டங்களை உருவாக்குகின்றனர்.

இந்நிலையில் 2013ம் வருடம் சுமார் 72,000 சதுர அடி பரப்பளவில் வித விதமான பூக்களைக்கொண்டு மிராக்கிள் கார்டன் என்ற பெயரில் துபாயில் பிரம்மாண்ட பூந்தோட்டம் உருவாக்கப்பட்டு மக்களின் பார்வைக்காக திறக்கப்பட்டது. கோடை காலத்தையோட்டி தற்காலிகமாக மூடப்பட்ட துபாயில் உள்ள பிரம்மாண்ட மலர் பூங்கா நேற்று மக்களின் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது. இதற்கான துவக்க நிகழ்ச்சி பூங்கா அரங்கில் நடைபெற்றது. முதல் நாளிலேயே ஏராளமானோர் குவிந்தனர். இப்பூங்கா வருடத்தில் ஆறுமாத காலம் செயல்படும்.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து 4.5 கோடிக்கும் மேற்பட்ட மலர்களோடு இப்பூங்கா ஏற்படுத்தப்பட்டு பல்வேறு அழகிய வடிவங்களோடு மலர் அரங்குகள் உருவாக்கப்பட்டுள்ளது. சென்ற வருடம் லட்சக்கணக்கான மக்கள் இப்பூங்காவிற்கு வருகை தந்து பூக்களை ரசித்து சென்றனர். உலகின் மிகப்பெரிய மலர் பூங்காக்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

**சீனாவில் நவம்பர் மாதத்தில் தங்க நிற இலைகளைத் தூவும் 1400 ஆண்டு கிங்கோ மரம்**



பீஜிங்: சீனாவின் ஷோன்ங்னான் மலைப்பகுதியில் உள்ள புத்த துறவிகளின் மடாலயத்தில் இருக்கும் 'கிங்கோ மரம்' சுமார் ஆயிரத்து நானூறு ஆண்டுகளாக நவம்பர் மாதங்களில் தங்க நிற இலைகளைத் தூவுவதை வாடிக்கையாக வைத்துள்ளது. சுமார் 200 மில்லியன் ஆண்டுகளாக இந்த மரத்தின் இனம் மாறாமல், அழியாமல் இருந்துவருவதால், இவை வாழும் படிமங்கள் எனவும் இப்பகுதி மக்களால் அழைக்கப்படுகின்றன. சீனர்கள் மற்றும் வெளிநாட்டை சேர்ந்த பலரும் இந்த மரத்தை காண இப்பகுதிக்கு அதிக அளவில் வருகை புரிகின்றனர்.

**பாசனத்துக்காக வைகை அணையில் இன்று முதல் தண்ணீர் திறப்பு : ஜெயலலிதா அறிவிப்பு**



சென்னை: முதல்வர் ஜெயலலிதா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: தேனி மாவட்டத்தில் உள்ள வைகை அணையில் இருந்து பெரியாறு பிரதான கால்வாய் ஒருபோக பாசன நிலங்களுக்கும், இருபோக பாசனத்தில் 2வது போக பாசன நிலங்களுக்கும், திருமங்கலம் பிரதான கால்வாயின்கீழ் உள்ள ஒருபோக பாசன நிலங்களுக்கும், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள வைகை பழைய பாசன பகுதிகளுக்கும் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அவர்களின் வேண்டுகோளை ஏற்று, பெரியாறு பிரதான கால்வாய் ஒருபோக பாசன நிலங்களுக்கும், இருபோக பாசனத்தில் 2வது போக பாசன நிலங்களுக்கும், திருமங்கலம் பிரதான கால்வாயின்கீழ் உள்ள ஒருபோக பாசன நிலங்களுக்கும், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள வைகை பழைய பாசன பகுதிகளுக்கும் பாசனத்திற்காக இன்று முதல் வைகை அணையில் இருந்து நீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளேன். இதனால், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 2,59,663 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி : நாளை முதல் கனமழை**




சென்னை: வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதை அடுத்து, நாளை முதல் தமிழகத்தில் மழை பெய்யும்

என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வட கிழக்கு பருவமழை தொடங்கி 3 மாதம் வரை தமிழகத்தில் மழை பெய்யும். இயல்பாக தமிழகத்தில் இந்த காலத்தில் 44 செ.மீ. மழை பெய்வது வழக்கம். கடந்த ஆண்டு 2 சதவீதம் குறைவாக பெய்தது. ஆனால், இந்த ஆண்டில் நேற்று வரை பெய்த மழையே 48 செமீ வரை பெய்துள்ளது. சென்னையை பொறுத்தவரை இயல்பாக 79 செ.மீ. பெய்ய வேண்டும். ஆனால், நேற்று வரை 114 செமீ வரை பெய்துள்ளது. வட கிழக்கு பருவமழையை பொறுத்தவரையில் கடந்த 2004-11ம் ஆண்டு காலங்களில் தமிழகத்தில் சாதகமாகவே பெய்துள்ளது. அதாவது, இயல்பைவிட அதிகமாகவே பெய்துள்ளது. குறிப்பாக, 2005ம் ஆண்டு இயல்பாக பெய்ய வேண்டிய 44 செ.மீ.க்கு பதிலாக 77 செ.மீ. வரை பெய்துள்ளது.

இது இயல்பைவிட 79 சதவீதம் கூடுதலாக கணக்கிடப்பட்டுள்ளது. அதிக மழை என்று பார்த்தால், கடந்த 1918ம் ஆண்டில் சென்னை நுங்கம்பாக்கத்தில் 109 செ.மீ. பெய்துள்ளது. அடுத்ததாக, 1985ம் ஆண்டில் மீனம்பாக்கத்தில் 107 செ.மீ. மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், இந்த ஆண்டு பருவமழை முடிவதற்கான காலம் இன்னும் 30 நாட்கள் உள்ளன. அதனால் டிசம்பர் மாதத்திலும் மழை பெய்வதற்கான வாய்ப்புகள் உள்ளதால் இதுவரை பெய்த மழையை விட இந்த ஆண்டும் கூடுதலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கலாம். இந்நிலையில், தென் கிழக்கு வங்கக் கடலில் நிலவும் ஒரு மேலடுக்கு சுழற்சி காரணமாக புதிதாக ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை நேற்று உருவாகி உள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு நிலை, தமிழக கடலோரத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், தமிழகத்தில் இன்று ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். மேற்கு நோக்கி நகர்ந்து இலங்கையை ஒட்டிய கடலோரப் பகுதிக்கு வந்தால் கனமழை எதிர்பார்க்கலாம். நாளை முதல் தமிழகத்தில் மழை

அதிகரிக்கும். அதைத் தொடர்ந்து வரும் நாட்களிலும் மிக கனத்த மழை பெய்வதற்கான வாய்ப்புள்ளது. சென்னையை பொறுத்தவரை பொதுவாக மேகமூட்டம் காணப்படும். நகரில் சில இடங்களில் மழை பெய்யும்.

**முட்டை விலை உயர்வு**




நாமக்கல்: நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் ஒரு முட்டையின் விலை 5 காசு உயர்த்தப்பட்டு, பண்ணை கொள்முதல் விலை 355 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்துள்ளதால் நாமக்கல் மண்டலத்திலும் விலை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.54, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.57 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களின் முட்டை விலை விபரம் (காசுகளில்): ஐதராபாத்-348, விஜயவாடா-346, மைசூர்-368, பெங்களூரு-365, மும்பை-388, டெல்லி-370, கொல்கத்தா-385 காசுகள்.

5 ஆண்டுகளுக்கு பிறகு நிரம்பிய பாகூர் ஏரி: விவசாயிகள் மகிழ்ச்சி

பாகூர், : பாகூர் கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மொத்தம் 24 ஏரிகள் உள்ளன. இதில் பாகூர் ஏரி புதுச்சேரியின் 2வது பெரிய ஏரியாக திகழ்கிறது. கடந்த 5 ஆண்டுகளாக சரியாக மழை பெய்யாத காரணத்தால் பாகூர் ஏரி முழு கொள்ளளவை எட்டாமல் இருந்து வந்தது. இந்தாண்டு வடகிழக்கு பருவமழை தமிழகம் மற்றும் புதுவையில் தாராளமாக பெய்தது. இதைத் தொடர்ந்து பாகூர் பகுதியில்

உள்ள 24 ஏரிகளும் நிரம்பியுள்ளன. இதில் பிரதான ஏரியான பாகூர் ஏரி 3.60 மீட்டர் உயரமுடையது. இதனால் 193.50 மில்லியன் கனஅடி நீர் சேர்ந்துள்ளது. மேலும் தொடர்ந்து நீர்வரத்தால் பங்காரு கலிங்கல் வாய்க்கால் வழியாக உபரிநீர் வெளியேறுகிறது. பாகூர் ஏரி நிரம்பியுள்ளதால் சுற்றியுள்ள 4,300 ஏக்கர் விளை நிலங்கள் வரும் 4 மாதத்துக்கு பாசன வசதி பெறுகின்றன. மேலும் பாகூர் பகுதியில் உள்ள அனைத்து ஏரிகளும் நிரம்பியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பொதுப்பணித்துறையினர் அனைத்து ஏரிகளிலும் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு கண்காணிப்பு பணியையும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## 5 ஆண்டுக்கு பிறகு பாகூர் ஏரி நிரம்பி வழிகிறது விவசாயிகள் மகிழ்ச்சி



தொடர் மழையால் பாகூர் ஏரி 5 ஆண்டுகளுக்கு பிறகு நிரம்பி வழிகிறது. இதனால் விவ சாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பாகூர் ஏரி

பாகூர் கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதியில் மொத்தம் 24 ஏரிகள் உள்ளன. இதில் பாகூர் ஏரி புதுவை மாநிலத்தின் 2-வது பெரிய ஏரியாகும். இந்த ஏரி மூலம் பாகூர், அரங்கனூர், சேலியமேடு, குடியிருப்புபாளையம், நிர்ணயப்பட்டு, ஆதிங்கப்பட்டு, குருவிநத்தம் மற்றும் தமிழக பகுதியில் உள்ள கரைமேடு உள்பட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த 4,300 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த ஏரி 3.60 மீட்டர் உயரமும், 193.50 மில்லியன் கனஅடி கொள்ளளவும் கொண்டதாகும். கடந்த 5 ஆண்டுகளாக இந்த ஏரி நிரம்பாமல் இருந்தது. இதனால் பாசன விவசாயிகள், விவசாயத்துக்கு போதுமான தண்ணீர் இன்றி சிரமப்பட்டனர்.

நிரம்பி வழிகிறதுஇந்நிலையில் கடந்த மாதம் தொடங்கிய வடகிழக்கு பருவமழை புதுவை மாநிலத்தில் பலத்த மழையாக பெய்தது. இதன் காரணமாக புதுவை மாநிலத்தின் பிரதான ஏரிகள் வேகமாக நிரம்பியது. ஆனால் பாகூர் ஏரியின் நீர்வரத்து பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பால் தண்ணீர் மெதுவாக வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பாகூர் ஏரி அதன் முழு கொள்ளளவை எட்டி, நிரம்பி வழிகிறது. ஏரிக்கு தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால் உபரிநீர் பங்காரு கலிங்கல் வாய்க்கால் வழியாக வெளியேற்றப்படுகிறது.

5 ஆண்டுகளுக்கு பிறகு

5 ஆண்டுகளுக்கு பிறகு ஏரி நிரம்பியுள்ளதால் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த தண்ணீர் அடுத்த நான்கு மாதம் விவசாய பாசனத்துக்கு போதுமானதாக இருக்கும் என்று பொதுப் பணித்துறையினர் கூறியுள்ளனர்.ஏரியில் அசம்பாவிதம் எதுவும் ஏற்படாமல் தடுக்கும் வகையில் பொதுப்பணித்துறை (நீர்பாசன பிரிவு) உதவி பொறியாளர் தீனதயாளன் மற்றும் அலுவலர்கள் கண் காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## கனமழை எச்சரிக்கையால் கடலூர் முதுநகரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரம்



கடலூர் முதுநகர்

கனமழை எச்சரிக்கையை தொடர்ந்து கடலூர் முதுநகரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நகராட்சி பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

பருவமழை

தமிழகம் முழுவதும் கடந்த மாதம் 28–ந் தேதி முதல் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. அதன்படி, கடலூர் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு கனமழை கொட்டி தீர்த்தது. இதில் 70–க்கும் மேற்பட்டவர்கள் மழை வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தனர். ஏராளமான குடிசை வீடுகள் சேதமடைந்தன, ஆடு, மாடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. குறிப்பாக கடலூர்முதுநகர் பகுதியில் உள்ள பீமாராவ் நகர், சுத்துக்குளம், ஐந்து கிணற்று மாரியம்மன் நகர், குட்டக்காரத்தெரு, பச்சையாங்குப்பம் வி.கே.சி. நகர், செல்லாங்குப்பம், சாலக்கரை, ஏணிக்காரன்தோட்டம் ஆகிய பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கி

வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் இப்பகுதி மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, மீண்டும் வீட்டுக்கு திரும்பி சென்றனர். மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில் நிவாரண பணிகளை மேற்கொள்ள தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின் படி, 6 அமைச்சர்கள் முகாமிட்டு பணிகளை மேற்கொண்டனர். மேலும், 10 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் வெள்ள சேத பணிகளை பார்வையிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகும் என்றும், இதன் காரணமாக நாளையும் (ஞாயிற்றுக்கிழமை), 30–ந்தேதியும் (திங்கட்கிழமை) கடலோர மாவட்டங்களில் கன மழை பெய்யும் என சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை விடுத்தது.

முன்னெச்சரிக்கை

இதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடலூர் நகராட்சி ஆணையர் முருகேசன் தலைமையில் மண்டல செயற்பொறியாளர் ராமமூர்த்தி, நகர அமைப்பு அலுவலர் முரளி, உதவி பொறியாளர் ஷரினா நிஷா ஆகியோர் கடலூர் முதுநகர் பகுதியில் உள்ள கால்வாய், சாக்கடைகள், நீர்வழி பாதைகளில் உள்ள அடைப்பு மற்றும் தடைகளை பொக்லைன் எந்திரம் மூலம் நகராட்சி ஊழியர்கள் அகற்றும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

மேலும் இதுபற்றி நகராட்சி ஆணையர் முருகேசன் கூறுகையில், கால்வாய், சாக்கடைகளில் உள்ள அடைப்புகளை அகற்றுவதன் மூலம் சாலையில் தண்ணீர் தேங்காதவாறும், வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகாமலும் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

## கொடைக்கானல், ஊட்டியை போல சுற்றுலா தலமாகிறது: சிறுமலையில் 20 ஏக்கரில் பிரமாண்ட பூங்கா



திண்டுக்கல்

கொடைக்கானல், ஊட்டியை போல சிறுமலையையும் சிறந்த சுற்றுலா தலமாக்க அங்கு ரூ.5½ கோடியில் 20 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்ட பூங்காவை அமைக்க தோட்டக்கலைத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

<u>'குட்டி கொடைக்கானல்'</u>

திண்டுக்கல் அருகே உள்ள சிறுமலையில் நிலவும் சீதோஷ்ண நிலைக்கு ஏங்காதவர்கள் எவரும் இருக்க முடியாது. அங்கு வீசும் குளிர்ந்த காற்றுக்கும், கமழும் மூலிகை மணத்துக்கும் ஈடு இணை எதுவும் இல்லை என்றே சொல்லலாம். அதை 'குட்டி கொடைக்கானல்' என்றும் செல்லமாக அழைக்கிறார்கள்.

18 கொண்டை ஊசி வளைவுகளை கடக்கும்போதுதான் எத்தனை உற்சாகம்; எத்தனை மகிழ்ச்சி. மலை உச்சியில் கண்ணுக்கு

விருந்தளிக்கும் விண்ணை முட்டும் மரங்கள், பசுஞ்சோலைகள், மணம் வீசும் பூக்கள் என சிறுமலையின் அழகை வர்ணித்துக்கொண்டே செல்லலாம். இயற்கை கொட்டி கிடக்கும் சிறுமலை எப்போது சுற்றுலா தலமாக மாறும்? என்பது பலரின் ஏக்கமாக இருந்து வருகிறது. கொடைக்கானலை போல சிறுமலையிலும் சுற்றுலா வளர்ச்சி பணிகளை மேம்படுத்த வேண்டும் என பலரும் விருப்பம் தெரிவித்து வருகிறார்கள்.

<u>பிரமாண்ட பூங்கா</u>

இதன் எதிரொலியாக சிறுமலையில் திண்டுக்கல் தோட்டக்கலைத்துறை சார்பில் பிரமாண்ட பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறுமலை அகஸ்தியர்புரத்தை கடந்து தென்மலை செல்லும் வழியில் தோட்டக்கலைத்துறைக்கு சொந்தமான பண்ணை உள்ளது. 510 ஏக்கர் பரப்பளவு கொண்ட அந்த பண்ணையின் ஒரு பகுதியில் 20 ஏக்கரில் 15 பொழுது போக்கு அம்சங்கள் அடங்கிய கண்கவர் பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்காக ரூ.5½ கோடியில் திட்டமதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. இதுகுறித்து தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராமநாதன் கூறியதாவது:–

கொடைக்கானல், ஊட்டியில் தோட்டக்கலைத்துறை சார்பில் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதே போல சிறுமலையையும் சிறந்த சுற்றுலா தலமாக்க திண்டுக்கல் தோட்டக்கலைத்துறை திட்டமிட்டு உள்ளது. இதற்காக ரூ.5½ கோடியில் பிரமாண்ட பூங்கா அமைக்க அனுமதி கேட்டு அரசுக்கு திட்ட மதிப்பீடு அனுப்பி உள்ளோம்.

அதன்படி சிறுமலையில் உள்ள தோட்டக்கலை பண்ணையில் 20 ஏக்கர் பரப்பில் குழந்தைகள் தோட்டம், வண்ணத்துப்பூச்சி தோட்டம், சிறுமலை வாழை தோட்டம், மூலிகை தோட்டம், கண்களை கொள்ளை கொள்ளும் செயற்கை நீர்வீழ்ச்சிகள், வண்ண விளக்குகள், பொழுதுபோக்கு அம்சங்களுடன் அந்த பூங்காவை அமைக்க திட்டமிட்டு உள்ளோம். அரசின் அனுமதிக்காக காத்திருக்கிறோம். அனுமதி கிடைத்ததும்

பணிகள் விரைவில் தொடங்கும். இவ்வாறு அவர் கூறினார்.ஒரு ஆண்டாக காத்திருக்கிறது.

சுற்றுலா துறையின் ரூ.6 கோடி திட்டம்

திண்டுக்கல் மாவட்ட சுற்றுலா துறையும் சிறுமலையை சுற்றுலா தலமாக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இதற்காக ரூ.6 கோடி மதிப்பில் கடந்த ஆண்டு திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்த திட்டம் அரசின் அனுமதிக்காக காத்திருக்கிறது. இது குறித்து சுற்றுலாத்துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, 'சிறுமலையை சிறந்த சுற்றுலா தலமாக்க அங்கு சுற்றுச்சூழல் பூங்கா, சிறுவர் பூங்கா, வண்ண விளக்குகள் அமைப்பது, ரோடு வசதியை மேம்படுத்துவது, இயற்கையை ரசிக்க ஆங்காங்கே காட்சி கோபுரங்கள் அமைப்பது என ரூ.6 கோடியில் கடந்த ஆண்டு திட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அரசு ஒப்புதலுக்காக காத்திருக்கிறோம். அனுமதி கிடைத்ததும் பணிகள் நிறைவேற்றப்படும்' என்றார். இந்த திட்டத்துக்கு விரைவில் அரசு அனுமதி கொடுத்து, பணிகளை தொடங்க உத்தரவிட வேண்டும் என்பது அனைவரது விருப்பமாக இருக்கிறது.

## நிலவேம்பு கசாயம் குழந்தைகள் வயதுக்கு ஏற்ப அளவு குறைத்து கொடுக்க வேண்டும் டாக்டர்கள் ஆலோசனை



வேலூர்,

நிலவேம்பு கசாயம் குழந்தைகள் வயதுக்கு ஏற்ப அளவு குறைத்து கொடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

<u>நிலவேம்பு கசாயம்</u>

வேலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடர்ந்து மழை பெய்தது. இதனால் மழையால் மக்களுக்கு எந்தவித தொற்று காய்ச்சல் அபாயமும் ஏற்பட கூடாது என்று அரசு சார்பில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அம்மா உணவகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தினமும் காலை நேரங்களில் இலவசமாக நிலவேம்பு கசாயம் வழங்கப்படுகிறது.

இந்த நிலவேம்பு கசாயத்தை மக்கள் சிறிய பாத்திரங்களில் வாங்கி சென்று வீடுகளில் உள்ளவர்களுக்கும் வழங்கி வருகின்றனர். மேலும் மாநகராட்சி சார்பில் அனைத்து அரசு பள்ளிகளிலும் மாநகராட்சி சார்பில் நிலவேம்பு கசாயம் வழங்கப்படுகிறது.

<u>குழந்தைக்கு கொடுக்கலாமா?</u>

இந்த நிலையில் நிலவேம்பு கசாயம் பச்சிளங்குழந்தைகளுக்கு கொடுக்கலாமா? என்று பொதுமக்களிடம் சந்தேகம் எழுந்துள்ளது.

இது பற்றி வேலூர் மாநகராட்சி சுகாதார அலுவலர் வசந்த்திவாகரிடம் கேட்டதற்கு, அவர் கூறுகையில், ‘நிலவேம்பு கசாயம் குடிப்பதினால் யாருக்கும் எந்த பக்கவிளைவுகளும் ஏற்படாது. அதனால் நிலவேம்பு கசாயத்தை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடலாம். ஆனால் குழந்தைகளின் வயதுக்கு ஏற்ப குறைத்து வழங்க வேண்டும்’ என்றார்.

அடுக்கம்பாறை அரசு மருத்துவக்கல்லூரி குழந்தை நல டாக்டர் தேரணிராஜன் கூறியதாவது:–

நிலவேம்பு கசாயம் பச்சிளங் குழந்தைகளுக்கு கொடுப்பதால் எந்தவித பிரச்சினையும் ஏற்படாது. குழந்தைகள் வயதுக்கு ஏற்ப அளவு குறைத்து கொடுக்க வேண்டும். பெரியவர்களுக்கு 60 மி.லி நிலவேம்பு கசாயம்

வழங்குகிறார்கள். குழந்தைகளுக்கு 5 மி.லி. அளவாக எடுத்து கொடுக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## சின்னமனூர் பகுதிகளில் பூக்கள் வரத்து குறைவால் விலை அதிகரிப்பு



சின்னமனூர்,

சின்னமனூர் பகுதிகளில் பூக்கள் வரத்து குறைவிவால் விலை அதிகரித்து வருகிறது.

<u>பூக்கள் விவசாயம்</u>

தேனி மாவட்டம் சின்னமனூர் அருகே உள்ள சீலையம்பட்டி, கோட்டூர், கோவில்பட்டி, பல்லவராயன்பட்டியை சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயிகள் சம்மங்கி, செவ்வந்தி, கோழிக்கொண்டை, ரோஜா, மல்லிகை உள்ளிட்ட பூக்களை 500–க்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயம் செய்து வருகின்றனர். இங்கு விளையும் பூக்களை மதுரை, திண்டுக்கல், திருச்சி என தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் மற்றும் கேரள மாநிலத்திற்கும் விற்பனைக்கு அனுப்பி வருகிறார்கள்.

இந்த நிலையில் கடந்த 15 நாட்களாக பெய்த பலத்த மழையால் பூக்களின் வரத்து வெகுவாக குறைந்துள்ளது. சீலையம்பட்டி பூ மார்க்கெட்டில் பூக்களின் விலை அதிகரித்துள்ளது. கடந்த 15 நாட்களுக்கு முன்பு வரை

விவசாயிகளிடம் கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை மட்டுமே கொள்முதல் செய்யப்பட்ட செவ்வந்தி மற்றும் கோழிக்கொண்டை பூக்கள் தற்போது கிலோ ரூ.100 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>பலன் இல்லை</u>

மேலும் மல்லிகை கிலோ ரூ.700, சம்பங்கி கிலோ ரூ.700 வரையும் விற்பனையாகின்றது. இதுகுறித்து பூ விவசாயிகள் கூறுகையில், கடந்த 15 நாட்களாக பெய்த தொடர் மழையால் பூக்களின் வரத்து முற்றிலும் குறைந்துள்ளது. இதனால் பூக்கள் விலை அதிகரித்துள்ளது. வரத்து இல்லாத காலத்தில் இந்த விலை அதிகரித்து எந்தவித பலனும் இல்லை. 100 கிலோ பூக்கள் உற்பத்தியாகும் இடத்தில் தற்போது 5 முதல் 10 கிலோ பூக்கள் தான் கிடைக்கிறது. ஆனால் மருந்து, உரம், கூலி ஆட்கள் உள்ளிட்ட அனைத்து செலவுகளும் ஒன்றாகத்தான் இருக்கிறது. இதனால் கூடுதல் விலை கிடைத்தும் பலன் இல்லை, என்று கூறினர்.

## நெல்லை மாவட்டத்தில் 47 சதவீதம் மழை அதிகம் பெய்து உள்ளது கலெக்டர் மு.கருணாகரன் தகவல்



நெல்லை

நெல்லை மாவட்டத்தில் வழக்கத்தை விட 47 சதவீதம் அதிகமாக மழை பெய்து உள்ளது என்று கலெக்டர் மு.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலெக்டர் மு.கருணாகரன், விவசாயிகளுக்கான புள்ளி விவர கையேட்டை வெளியிட்டு பேசினார். அப்போது, அவர் கூறியதாவது:–

<u>மழை அதிகம்</u>

நெல்லை மாவட்டத்தில் வளமையான மழை அளவு 814.80 மில்லி மீட்டர் ஆகும். கடந்த 2014–ம் ஆண்டு 1,320 மில்லி மீட்டர் வரை மழை பெய்தது. இது இயல்பான அளவை விட 62 சதவீதம் கூடுதல் ஆகும்.

அதே போல் நடப்பு ஆண்டிலும் வழக்கத்தைவிட கூடுதலாக மழை பெய்திருக்கிறது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுநாள் வரை 1,197.79 மில்லி மீட்டர் மழை கிடைத்து உள்ளது. வழக்கத்தை விட 47 சதவீதம் கூடுதல் ஆகும்.

கடந்த ஜனவரி மாதம் –4.75 மில்லி மீட்டர், பிப்ரவரி –13.48, மார்ச் –73.8, ஏப்ரல் –133.6, மே –93.9, ஜூன் –56.32, ஜூலை –13.15, ஆக –10.55, செப்டம்பர் –73.62, அக்டோபர் –236.59, நவம்பர் –488.03 மில்லி மீட்டர் மழை பெய்து உள்ளது. நடப்பு ஆண்டில் மேலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது.

<u>நீர் இருப்பு நிலவரம்</u>

இதுதவிர நெல்லை மாவட்டத்தில் பாபநாசம் அணை பகுதியில் ஒரே நாளில் 177 மில்லி மீட்டர் மழை பெய்து உள்ளது. மாவட்டத்திலேயே அதிக மழை நாட்களாக, தென்காசியில் 20 நாட்கள் மழை பதிவாகி உள்ளது. தற்போது அணைகளில் 72.9 சதவீதம் நீர் இருப்பு உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் மொத்தம் 2,449 குளங்கள் உள்ளன. இதில் 36 குளங்களில் 3 மாதங்களுக்கும், 399 குளங்களில் 2 மாதங்களுக்கும், 1,655

குளங்களில் 1 மாதத்துக்கும் நீர் இருப்பு உள்ளது. மீதி 344 குளங்கள் வறண்ட நிலையிலேயே உள்ளன.

இவ்வாறு கலெக்டர் மு.கருணாகரன் தெரிவித்தார்.